அரசரடிப் புத்துயிர்ப் பாமாலை

தமிழ்நாடு இறையியல் கல்லூரி

அரசரடி, மதுரை—10

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

அரசரடிப் புத்துயிர்ப் பாமாலை

தமிழ்நாடு இறையியல் கல்லூரி

அரசரடி, மதுரை–10

இந்நூல் கிடைக்குமிடம் :
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி மதுரை—10

De Nobili Press, Madurai--8.
1970

நூன்முகம்

" 'அறி'வன்று பரமன்பே ரருள்தன்னைப் பெறுதற்குப்
'பரி' வொன்றே தேவையென் றறி." (I கொரி 8 : 1)

திரியுண்டு, திரிமுனையில் தீயுமுண்டு; தீயதனைச் சுடராக்க எண்ணெயுமுண்டு. இத்தனையுமிருந்தும் தீபவொளி வீடெங்கும் நிறையவில்லை; காரணமென்ன? திரியதனைத் தூண்டிவிடக் கோல் ஒன்றில்லை. ஆம்! இன்றைய கிறிஸ்தவனின் 'ஆன்மா' வாகிய விளக்கு ஒளிமங்கிக் கிடப்பதன் காரணமும் தூண்டு கோல் ஒன்றால் அது தீண்டப்படாதமையே. ஆன்மாவெனும் விளக்கு அணையா விளக்காய்த் திகழ வேண்டுமாயின், அதன் உணர்வாகிய திரி அனுதினமும் தூண்டப்படல் வேண்டும். ஆன்ம உணர்வைத் தூண்டுபவர் ஆவியானவர் ஒருவரே. தூண்டுகோல் எது? திருச்சபையின் திருவினைகளனைத்தும் ஆன்ம உணர்வுக்குத் தூண்டுகோல்களே. அவற்றுள் ஒன்று, பாட்டிசைத்தல்.

பாடல்கள் பலவகை; பொதுவான பிரிவுகள் புத்தியில் எழுந்தவை, பக்தியில் எழுந்தவை என்பன. பாமரனைப் பகுத்தறிவுக்கு இழுப்பவை முன்வகையைச் சார்வனவாயின், பக்தனைப் பரம் நோக்கி இழுப்பவை பின்வகையைச் சார்வனவாகும். அறிவுக்கல்ல, ஆன்மாவுக்குப் புத்துயிரளிப்பதே பக்திப்பாடல்களின் நோக்கம். இந்நூலின் நோக்கமும் அதுவேயாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுத் திருத்தம் பெற்ற பாடல்கள் பலவும், புதிய பாடல்கள் சிலவும் அடங்கிய 'அரசரடிப் புத்துயிர்ப் பாமாலை' எனும் இச்சிறு நூலைத் திருச்சபையின் மக்கள் ஒவ்வொருவரும் ஆவலோடு வாங்கி, இதிலுள்ள பாடல்களைப் பாடிப் பழகி ஆனந்தமடையவும் ஆன்மீகப் பயன்பெறவும் அன்புடன் வேண்டும்,

அரசரடி,
மதுரை-10
6—2—'70

நூலமைப்புக் குழுவினர்
தமிழ்நாடு இறையியற் கல்லூரி

மதிப்புரை

"கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்......
நாடோறும் அவர் இரட்சிப்பை நற்செய்தியாகக் கூறுங்கள்"

சங்கீதம் 96 : 1-2.

பக்திப் பாடல்களில் சில அமைதி அளிப்பவை; சில எழுச்சி ஊட்டுபவை. இறை வழிபாட்டில் இருவகைப் பாடல்களையும் பயன்படுத்துகின்றோம்.

தமிழ்த் திருச்சபை மக்கள் எழுப்புதல் பாடல்களை மிகவும் விரும்புகின்றனர்; பாடிப் பெரிதும் பயன் பெறுகின்றனர். எனவே நம் கல்லூரி வழிபாடுகளிலும் இப்பாடல்களை நன் முறையில் பயன்படுத்தலாமே எனும் நோக்குடன் மாணவ நண்பர்கள் முன் வந்து இப் பாமாலையைத் தொகுத்துள்ளனர்.

இவற்றுள் அரசரடியில் மலர்ந்த பாமலர்கள் சில; புத்தம் புதிய மலர்களும் சொற்பமே. பெரும்பாலும் தமிழ்த் திருச்சபையில் ஏற்கனவே மணங்கமழும் மலர்கள்தான். இலக்கியச் சிறப்பும், இறையியல் அழகும், கவிதை நடையும் குறைந்திருப்பினும், அனுபவக் கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன. இவற்றுள் சிலவற்றைத் தெரிந்து, தொடுத்து, கிறிஸ்தரசருக்குப் புகழ் மாலையாகச் சூட்டுகின்றோம்.

புத்துயிர் அளிப்பவர் தூய ஆவியானவர்; தனி நபர்கள் கிறிஸ்தரசருக்குத் தம் வாழ்க்கையை ஒப்படைத்துச் சீர் பெறும்போதுதான் இப்புத்துயிர் மலர்கின்றது: திருச்சபையும் புத்துயிர் பெறுகின்றது. பாடுவோரின் வாழ்க்கை புத்துயிர் பெற்று விளங்க இப்பாமாலை துணைபுரியட்டும்!

தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை—10
லெந்து காலம் 1970

சாமுவேல் அமிர்தம்
முதல்வர்

பொருளடக்கம்

பொருளடக்கம்		எண்
அழைப்பு	...	73 — 82
ஆண்டவரின் பிறப்பு	...	48 — 52
ஆண்டவரின் வருகை	...	98 — 100
ஆயத்தம்	...	85 — 88
ஆனந்தம்	...	23 — 25
இயேசுவின் நாமம்	...	45
இறைத் துதி	...	1 — 16
ஈகை	...	46
உயிர்த் தெழுதல்	....	68
ஒப்புக் கொடுத்தல்	....	83, 84
கிறிஸ்தவ வாழ்வு	....	36 — 44
சிலுவைப் பாடுகள்	...	58 — 67
தெய்வீகப் பராமரிப்பு	...	28 — 35
தேவ அன்பு	...	26, 27
நன்றி செலுத்துதல்	....	17 — 22
பாவ உணர்வு	....	69 — 72
மோட்சம்	....	89 — 97
வருடப் பிறப்பு	....	53 — 57
வேதப் புத்தகம்	...	47

பாடல்களின் நிரல் — எண்

அதிகாலையில் பாலனைத் தேடி	... 52
அதிசயமான ஒளி நாடாம்	... 93
அநாதி தேவன் உன் அடைக்கலமே	... 29
அந்தோ ! கல்வாரியில் அருமை ரட்சகரே	... 63
அழைக்கிறார் அழைக்கிறார்	... 76
அன்பிலே பூரணரே	... 27
ஆதி மெய் தேவனே	... 62
ஆண்டவர் எம் ஏசுவை	... 9
ஆனந்தமாய் இன்பக் கானான்	... 92
ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே	... 12
இம்மட்டும் கிருபை தந்த தேவா	... 57
இயேசு என்னும் இனிய நாமம்	... 50
இயேசு மணாளா ஆசை நீரே	... 22
இயேசுவின் நாமம் ஓங்கிடவே	... 14
இயேசுவின் மார்பினில் சாருவேனே	... 65
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் மீட்பராம்	... 17
இயேசுவே உம் நாமத்தினால்	... 1
இயேசுவே எந்தன் இதயத்தின் ராஜா	... 71
இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை	... 32
இயேசுவை நாம் எங்கே காணலாம்	... 41
இரங்குமே என் இயேசுவே	... 38
இன்பக் கானானை கண்டு நான்	... 91

ஈகையில் பின்னிடும் என் மனமே	...	46
உந்தன் சித்தம்போல் நடத்தும்	...	44
உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா	...	68
உறக்கம் தெளிவோம்	...	85
உலகோர் உன்னைப் பகைத்தாலும்	...	36
உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்	...	28
எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்	...	19
எந்தன் அன்புள்ள ஆண்டவர்	...	4
எந்தன் இயேசுவின் அன்பதையே	...	53
எந்தன் உள்ளம் புதுக் கவியாலே	...	54
எந்தன் வாயில் புதுப்பாட்டு	...	25
என் கால்களுக்குத் தீபம் யேசு	...	45
என்ன தியாகம் என் கல்வாரி நாயகா	...	60
என் தேவனாகிய கர்த்தாவே	....	16
என் தேவனே என் அன்பனே	...	79
என் மனமே நீ இயேசுவை நேசி	....	70
என் மீட்பர் சென்ற பாதையில்	...	81
என்னை மறவா இயேசு நாதா	...	18
என்னையும் உமக்கு நான் தந்தேனே	...	83
ஏழை மனுவுருவை எடுத்த	...	61
ஏறுகின்றார் தள்ளாடித் தவழ்ந்து	....	67
ஓ—மாளுதே என் கரத்தின் கிரியைகளே	...	77
கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறாரே	...	30
கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது	...	15
கர்த்தரிலும் தம் வல்லமையிலும்	...	87
கர்த்தரைப் பாடியே போற்றிடுவோமே	...	8

காண்பேன் எப்போது என் இயேசுநாதனை 100

காரிருள் வேளையில் கடும் குளிர் நேரத்தில் 51

காலம் கடந்திடும் முன்னர் ... 86

காலையும் மாலை எவ்வேளையும் கர்த்தரை ... 10

கிறிஸ்தவ ஜீவியம் சௌபாக்கிய ஜீவியம் 43

குதூகலம் நிறைந்த நன்னாள் ... 24

கொல்கொதாவே கொலைமரமே ... 66

சகல ஜனங்களே கைக்கொட்டி தேவனை ... 7

சத்திய வேதம் பக்தரின் கீதம் 47

சந்தோஷக் கீதம் என்னில் பொங்குதே ... 55

சிலுவை சுமந்த உருவம் 64

சுபசெய்தி நீ இன்று கேட்டாய் ... 73

சேனையதிபன் நம் கர்த்தருக்கே 13

துதித்துப் பாடிடப் பாத்திரமே 3

துதிப்போம் துதிப்போமே 5

தூயா தூயா நான் போற்றுவேன் ... 6

தேவ கிருபை என்றுமுள்ளதே 31

தேவ சாயல் ஆக மாறி 95

தேவ சித்தம் நிறைவேற என்னையும் ... 84

தேவ தேவனை ஏகமாய் நாம் பாடி 21

தேவாதி தேவன் ராஜாதி ராஜன் 48

தேவா பிரசன்னம் தாருமே 2

தேவன் நமக்கு அடைக்கலமும் 34

தோத்திரம் பாடியே போற்றிடுவேன் ... 20

நம்பியே வா நல் வேளையிதுவே 75

நிலையில்லா உலகத்தில் அலைந்தேனையா ... 72

பாரம் சுமந்தவனே வாராய் வாராய்	....	42
பார் வேந்தன் இப்பொழ் உள்ளம் வந்தார்	....	37
பாவம் பெருகுதே	....	69
பாவிக்குப் புகலிடம் இயேசு ரட்சகர்	...	59
பாவியே ஜீவ ஊற்றண்டை வா	...	80
பிரதான தூதன் எக்காளம் முழங்க	...	99
பிறந்தார் பிறந்தார்	...	49
பூரண வடிவுள்ள சீயோனிலே	...	94
பெலமளித் தெமைப் புது வழிகளில்	....	33
பேரின்ப நதியே தாகத்தைத் தீர்த்திட	....	39
பொங்குதே ஆனந்தம்	....	23
போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை	....	11
போற்றிடுவேன் பராபரனே	....	56
மகனே ஓ—மகனே உன் இதயத்தைத் தாராயோ	...	82
மாறிடா எம் மாநேசரே	...	26
மீட்பர் இயேசு குருசில் தொங்கினரே	....	58
மோசம் போகாதே நண்பனே	...	78
மோட்ச யாத்திரை செல்கிறோம்	....	90
மோட்ச வீட்டை நான் என்று சேர்வேன்	....	89
ராஜாதி ராஜாவே வாரும்	....	98
வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே	....	74
வாசலண்டை நின்று ஆசையாய் தட்டும்	...	88
வானங்களும் வானாதி வானங்களும்மை	...	35
விசுவாசம் என்னும் கேடகம்தான்	...	40
ஜீவனுள்ள தேவனைச் சேவிப்பார்	....	96
ஜீவியமே ஒரே ஜீவியமே	...	97

பல்லவிகளின் நிரல் எண்

அவர் அற்புத மானவரே	...	8
அற்புதம் அற்புதம் இயேசு எனக்கு	...	15
அற்புதர் அல்லவோ அற்புதர் அல்லவோ	...	1
அன்பால் உள்ளம் பொங்குதே	...	2
இயேசு தங்கப் பேழையை அன்றே தொட்டாரே	...	17
இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன்	...	7
இயேசுவை சேவிக்கத் தீர்மானித்தேன்	...	11
இரத்தத்தால் ஜெயம்	...	18
இன்ப இயேசு என் மதுரம்	...	13
எழுப்புதல் அனுப்பும் எழுப்புதல் அனுப்பும்	....	9
என் அன்பராம் இன்பமாம் இயேசு	...	12
என் உள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே	...	3
என்ன என்ன ஆனந்தம்	...	4
கர்த்தர் என்தன் மேய்ப்பர்	...	23
துதி கனம் மகிமை	...	25
நாங்கள் பூமியில் அரசாளுவோம்	...	10
நான் ஆடிப்பாடி மகிழ்வேன்	....	21
நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே	....	20
நேசர் தேடி வந்தார்	...	16
நேற்றும் இன்றும் என்றும் மாறார்	....	14
பாவி நம்மை மீட்க வந்த	...	22
பெலன் கொடுப்பவரால்	....	6
மின்னி மின்னித் துலங்கிடும்	...	24
வல்லமை உண்டே உண்டே	...	19
வேதத்திலே வேதத்திலே	....	5

INDEX OF ENGLISH CHORUSES

	No.
Do Lord O Do Lord	13
Everybody ought to know	8
Everyday with Jesus	21
Every promise in the Bible ...	19
Give me oil in my lamp ..	23
Heaven came down	20
He's able, He's able	16
He is my everything	18
I have decided to follow Jesus	5
I have the joy joy joy-joy	25
I love Him better everyday	11
Is anything too hard for the Lord	6
It's bubbling, it's bubbling	14
I want everybody	22
Let the beauty of Jesus	1
Life is wonderful	10
Move on brother	12
Stop and let me	15
Teenager are you lonely	4
Trust in the Lord	7
Turn your eyes upon Jesus	2
Walking with Jesus	3
When the saints go marching by	17
Whisper a prayer in the morning	24
Whosoever will to the Lord	9

அரசரடிப் புத்துயிர்ப் பாமாலை

1. இயேசுவே உம் நாமத்தினால்
இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந்நன்னாளிலே

பல்லவி

எங்கள் தேவனே! எங்கள் ராஜனே!
எங்கள் தேவனே! எங்கள் ராஜனே!
என்றும் உம்மையே சேவிப்போம்
நன்றியுள்ள சாட்சியாக
உமக்கென்றும் ஜீவிப்போம்

2. நிலையில்லா இவ்வுலகில்
நெறி தவறி அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட
சாகா ஜீவன் கண்டடைந்தோம் — எங்கள் தேவனே

3. மண்ணை நாடிப் பொன்னை அடைந்தோம்
புகழ் தேடி ஏமாற்றங் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயம் பெற்றோம்
இயேசுவின் தரிசனத்தால் — எங்கள் தேவனே

4. உன்னைக் கண்டழைக்கும் சத்தத்தைக்
கேட்டாயோ ஓ பாவியே?
இன்று இயேசுவண்டை வாராயோ
நித்திய ஜீவன் பெற்றிடவே — எங்கள் தேவனே

5. இயேசுவை நாம் பின் செல்லுவோம்
உலகை என்றும் வெறுப்போம்
ஜீவபாதை சென்றிடுவோம்
என்றும் அவரின் பெலத்தால் — எங்கள் தேவனே

2

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம் பாதம் தொழுகிறோம்.

அனுபல்லவி

இயேசுவே உம் திவ்விய நாமத்தில்
இன்பமுடன் கூடி வந்தோமே

சரணங்கள்

1. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குனிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மைக் காருமே — தேவா

2. சாரோனின் ரோஜா லீலிபுஷ்பம்
சாந்த சொரூபி என் இயேசுவே
ஆயிரம் பேரிலும் சிறந்தோராம்
ஆண்டவரைத் தொழுகிறோம் — தேவா

3. கர்த்தர் செய்த உபகாரங்கள்
கணக்குரைத்து எண்ணலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் கையிலேந்தி
இரட்சகரைத் தொழுகிறோம் — தேவா

4. கர்த்தர் சமூகம் ஆனந்தமே
பக்தர் சபையில் பேரின்பமே
கர்த்தர் நாமத்தைக் கொண்டாடுகிறோம்
சுத்தர் போற்றும் தேவனே — தேவா

5. நூற்றிருபது பேர் நடுவே
தேற்றரவாளனே வந்தீரே
உன்னத ஆவியை ஊற்றிடுமே
மன்னவனே இந்நேரமே — தேவா

6. எப்போ வருவீர் என் இயேசுவே
ஏங்கி உள்ளம் உம்மைத் தேடுதே
பறந்து விரைந்து தீவிரமே
இறங்கி வாரும் இயேசுவே — தேவா

3

1. துதித்துப் பாடிடப் பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

பல்லவி

ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண் மணி போல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே
— ஆ அற்புதமே.

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே
— ஆ அற்புதமே

4. இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே
— ஆ அற்புதமே

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே
— ஆ அற்புதமே.

4

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் ஏசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப் போல் ஒரு தேவனைப் பூமியில்
அறிந்திடேன்
உயிர் தந்த தெய்வமே நீர்

பல்லவி

ஆ ! ஆனந்தம், ஆனந்தமே !
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே எந்தன் ஆருயிரே !

2. பெற்ற தாயும் என் தந்தையு மானவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரோ
வாக்கு மாறுதவரே — ஆ ! ஆனந்தம்

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தை நம்பிடுவேன்
உம்மையல்லால் இப்பூவினில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வம் நீரே — ஆ ! ஆனந்தம்

4. எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
தந்த வாலிப நாட்களிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே — ஆ ! ஆனந்தம்

5. பொன், வெள்ளியுமோ, பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீண் அல்லவோ
பரலோகத்தின் செல்வமே என் அரும் இயேசுவே
போதும் எனக்கு நீரே — ஆ! ஆனந்தம்

5

துதிப்போம் துதிப்போமே
துங்கவன் இஸ்ரவேலின் மங்கா மணாளனையே
— துதி

சரணங்கள்

1. சுத்தர்கள் ஒன்றுகூடித் துதிக்க நல்ல இந்த
வேளையில்
ஆவியில் நிறைந்து மெய் ஆனந்தம் பொங்கிட
ஆசை உள்ளில் நிறைவாய் ஈந்திடும் — துதி

2. பரிசுத்தர் கூட்டமெல்லாம் பாரினிலே எங்கும்
பரந்திட
பரிசுத்த ஆவியினால் பக்தர்களை நிரப்பியே
பரவச் செய்யும் எங்கள் இயேசுவே — துதி

3. பரம சேனையின் திரள் பரத்தில் எப்போதும்
பாடுவதைப் போல்
பாரினிலே பக்தர் பரவசமடைந்து
பணிவுடனே பாடி மகிழ்வோம் — துதி

4. துன்பம் நிறைந்த இந்த துயரமுள்ள பொல்லா
வாழ்க்கையில்
இன்பம் அடைந்து நம் இருதயம் பூரித்திட
இயேசுவை வாழ்க்கையில் ஆக்குவோம் — துதி

5. வசனத்தை வல்லமையாய்ப் போதித்திட வல்ல
ஆவி ஊற்றிடும்
மோசேயின் வாயோடிருந்து வல்லமையாய்
நடப்பித்த
வாக்கு மாரு நாதா வந்திடும் —துதி

6. இரண்டு மூன்று பேர் கூடி தொண்டு புரியும்
வேளை அங்கு
துரிதமாய் நான் வருவேன் தூயர்கள் மத்தியில்
என்ற
தூயா நேயனே இப்போ வாருமேன் —துதி

6

தூயா துதி உமக்கே!

தூயா, தூயா, நான் போற்றுவேன்
உம்மை நன்ருய்ப் போற்றுவேன் } (2 முறை)
இன்றும் என்றும் போற்றுவேன்

சரணங்கள்

1. அந்நியனுயிருந்து அன்பன் உம்மை வெறுத்த
என்னை மீட்டதும் நீரோ (2 முறை)
என்னை மீட்டதும் நீரோ விந்தையில்
விந்தையிதே
— (தூயா, தூயா)

2. சுத்திகரித்து என்னைத் தூயவனுக்க உந்தன்
தூயாவியை ஈந்தீரோ (2 முறை)
தூயாவியை ஈந்தீரோ, அற்புதம் அற்புதமே
— (தூயா, தூயா)

3. நோயும் பாவமும் தீர நேயா நீர் மாதயவாய்க்
காயங்கள் சகித்தீரே (2 முறை)
காயங்கள் சகித்தீரே என்சொல்வேன் ஆ,
என்சொல்வேன்
— (தூயா, தூயா)

4. ஏனோ இவ்வன்பெனக்காய் ஏதுமில்லாத என்னில்
என்னதான் கண்டீர் நீரும் (2 முறை)
என்னதான் கண்டீர் நீரும் அண்ணலே,
என் அண்ணலே
— (தூயா, தூயா)

5. தோத்திரம் ஏறெடுப்பேன் துங்கவனே அனந்த
துதியே துதியுமக்கே (2 முறை)
துதியே துதியுமக்கே, என்றுமே என்றென்றுமே
— (தூயா, தூயா)

7

சகல ஜனங்களே கைகொட்டி தேவனை
கெம்பீர சத்தத் தோடே ஆர்ப்பரித்திடுவோமே

சரணங்கள்

1. உன்னதமானவராகிய கர்த்தர்
எந்நாளும் அதிசயமானவராமே
மண் எங்கும் மகத்துவமான ராஜாவாம்
மகிழ்ந்து பாடிடுவோம் — சகல

2. போற்றிப் போற்றி பாடிடுவோமே
தேற்றி நம்மைக் காத்திடும் தேவனை
ஊற்றிடு வாரே ஆவி தனையே
சாற்றிடுவோம் துதியை — சகல

3. தேவாதி தேவன் ஆர்ப்பரிப் போடும்
கர்த்தாதி கர்த்தன் எக்காளத்தோடும்
பிரதான தூதனுடைய சத்தத் தோடும்
எழுந்தருளி வருவார் — சகல

4. அனேக ஸ்தலங்கள் அங்கேயும் உண்டு
அதில் ஒன்று நமக்கு ஆயத்தம் பண்ணி
அழைக்கவே வருவார் அனுதினம் நாமும்
அல்லேலூயா பாடுவோம் — சகல

8

1. கர்த்தரைப் பாடியே போற்றிடு வோமே
கருத்துடன் துதிப்போம் இனிய நாமமதை
கடலின் ஆழம் போல் கருணையோடிரக்கம்
கரையில்லை அவரன்பு கறையற்றதே

பல்லவி

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
இயேசுவைப் போல வேறோர் நேசரில்லையே

2. கொடுமையோர் சீறல் பெரு வெள்ளம் போல
அடிக்கையில் மோதியே மதில்களின் மீதே
பெலனும் இவ்வேழைக்கும் எளியோர்க்கும் திடனாய்
வெயிலுக்கு ஒதுங்கும் விண் நிழலுமானார் — இயேசு

3. போராட்டம் சோதனை நிந்தை அவமானம்
கோரமாய் வந்தும் கிருபையில் நிலைக்க
தேவ குமாரனின் விசுவாசத்தாலே நான்
ஜீவித்து சேவிக்க திடமளித்தார் — இயேசு

4. கல்லும் முள்ளுகளுள்ள கடின பாதையிலே
கலக்கங்கள் நெருக்கங்கள் அகமதை வருத்த
எல்லையில்லா எதிர் எமக்கு வந்தாலும்
வல்லவர் இயேசு நம் முன் செல்லுகிறார்
— இயேசு

5. சீயோனில் சிறப்புடன் சேர்ந்திட இயேசு
சீக்கிரம் வரும் நாள் நெருங்கி வந்திடுதே
முகமுக மாகவே காண்போமே அவரை
யுகயுக மாகவே வாழ்த்திடுவோம் — இயேசு

9

1. ஆண்டவர் எம் ஏசுவை ஆயிரம் துதிகளாலும்
ஆர்ப்பரித்துப் போற்றிட நாம் ஆயத்தமல்லோ!
ஆவியின் சந்தோஷமே எமக்களித்தாரே!

பல்லவி

ஆதியும் நீரே! என் அந்தமும் நீரே
மாறிடா நேசரே! எந்தன் இயேசுவே

2. எண்ணில்லா எம் துன்பங்கள்—எங்கு போய்
—ஒழிந்ததோ
எம் முள்ளந்தான் நன்றியால் நிறைந்து
பொங்குதே!
ஏகமாய் எல்லோரும் கூடி ஸ்தோத்தரிப்போமே.
—ஆதி

3. சுயாதீன ஆவியால் சிலர்—சத்தியம் விட்டோ
டினும்
சக்தியீந்து சாட்சியாக இன்றும் நிலைக்க
பக்தியில் வைராக்கியம் எமக்களித்தாரே —ஆதி

4. உன்னதமா தேவனின்—உயர்ந்த செட்டைகளின் கீழ்
தஞ்சமென அஞ்சிடாமல் தாங்கி வாழ்வோம்
தீங்கு நாட்கள் தீவிரம் எம் முன் நெருங்கிற்றே
—ஆதி

5. இயேசு எம் பட்சம் நிற்க—ஈனசாத்தானும் தோற்க
ஆர்ப்பரிப்போ டாரவாரம் எங்கும் தொனிக்க
அல்லேலுயா வல்லமையாய்ப் பாடிடுவோமே!
—ஆதி

6. இடுக்கமான வழியே—இன்பக்காஞன் ஏசுவே
இன்னும் அவரோடு கூடப்பாடு சகிப்போம்
இன்றும் என்றும் ஏசுவோடு ஆட்சி செய்வோமே
—ஆதி

10

பல்லவி

காலையும் மாலை எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்.

அ. பல்லவி

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், எனத் தூதர்
பாடிடும் தொனி கேட்குதே.

சரணங்கள்

1. கர்த்தர் என் வெளிச்சம், ஜீவனின் பெலனும்
கிருபையும் இரட்சிப்புமானர்.
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன் —காலை

2. எனக் கெதிராய் ஓர் பாளயமிறங்கி
என் மேல் ஓர் யுத்தம் வந்தாலும்
பயப்படேன் எதிராளி நிமித்தமாய் செவ்வையான
பாதையில் நடத்திடுவார். —காலை

3. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக்காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்கு
வதை
வாஞ்சித்து நாடிடுவேன் —காலை

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில்
தேடிச் சேர்த்தென்னை மறைப்பார்
உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னை
பாதுகாத்து
உயர்த்துவார் கன்மலை மேல். —காலை

5. எந்தன் முகத்தை தேடுங்கள் என்று
என் கர்த்தர் சொன்னதினாலே
தம் முகத்தைத் தேடுவேனே கூப்பிடும் என் சத்தம்
கேட்டு
தயவாக பதிலளிப்பார். —காலை

6. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கர்த்தர் என்னை சேர்த்துக் கொள்வார்
எந்தன் உள்ளம் ஸ்திரமாகத் திடமாகக் கர்த்
தருக்கே
என்றென்றும் காத்திருக்கும். —காலை

7. எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்கு மாறிடார்
தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர் விருப்பமும்
தவறாமல் நிறைவேற்றுவார். —காலை

11

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புனித இதயமுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறு
யேசுவை நாமென்றும் பாடித்துதிப்போம்

பல்லவி

இயேசு என்னும் நாமமே — என்
ஆத்துமாவின் கீதமே — என் நேசரேசுவை
நான் என்றும் ஏத்தி மகிழ்ந்திடுவேன்

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரங்கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன் — இயேசு

3. யோர்தான் நதிபோன்ற சோதனையிலும்
சோர்ந்தழிந்து மாளாதே
ஆர்ப்பின் ஜெயத்தொனியோடே
பாதுகாத்த அன்பை என்றும் பாடுவேன் — இயேசு

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன் — இயேசு

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
தந்து தொண்டு செய்குவேன். — இயேசு

12

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

பல்லவி

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எம்மைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம் — ஆத்துமமே

3. படகிலே படுத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்துக் கவிழ்ந்தாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தி எம்மைக்
காத்தாரே அல்லேலூயா — ஆத்துமமே

4. யோர்தானைக் கடந்தோம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்த்தோம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழுவோம் —ஆத்துமமே

5. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதிசீக்கிரத்தில் முடிகிறதே
விழிப்புடன் கூடி தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார் — ஆத்துமமே

13

1. சேனையதிபன் நம் கர்த்தருக்கே
செலுத்துவோம் கனமும் மகிமையுமே
அற்புதமே தம் அன்பெமக்கு — அதை
அறிந்தே அக மகிழ்வோம்.

பல்லவி

ஜெயகிறிஸ்து முன் செல்கிறார்
ஜெயமாக நடத்திடுவார்
ஜெயக் கீதங்கள் நாம் பாடியே
ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே — ஜெய

2. தாய் மறந்தாலும் நான் மறவேன்
திக்கற்றோராய் விட்டு விடேன்
என்றுரைத் தெம்மைத் தேற்றுகிறார்
என்றும் வாக்கு மாறிடாரே. — ஜெய

3. மேய்ப்பனில்லாத ஆடுகட்கே
நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இன்ப சத்தம் பின் சென்றிடுவோம்
இன்ப பாதைக் காட்டிடுவார் — ஜெய

4. சத்துருவின் கோட்டை தகர்ந்தொழிய
சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க
சாத்தானின் சேனை நடுங்கிடவே – துதி
சாற்றி ஆர்ப்பரிப்போம் — ஜெய

5. கறை திரை முற்றும் நீங்கிடவே
கர்த்தர் நம்மைக் கழுவிடுவார்
வருகையில் எம்மைச் சேர்க்கும்வரை
வழுவாமல் காத்துக்கொள்வார். — ஜெய

14

இயேசுவின் நாமம் ஓங்கிடவே
நேசமுடன் புகழ் பாடிடுவோம்
காசினியில் நிகர் வேறதற்கில்லை
தாசர்கள்நாம் துதி சாற்றிடுவோம்

அனுபல்லவி

வானமும் பூமி யாவையுமே
வார்த்தையினால் உண்டாக்கினவர்
என்னை மண்ணென்று நினைவாக்கினவர்
எனக்கென்றும் சொந்தமவர்

சரணங்கள்

1. அற்புதமாம் அதிசய மாம்
ஆண்டவர் இயேசுவின் நாமமதே
பேய்நடுங்கும் கடும்நோய் அகலும் — நல்
பேர் புகழ் ஓங்கிடும் நாமமதே —**இயேசுவின்**

2. வாழ்ந்திடும் வானோர் பூதலத்தோர்
வாழ்த்தி வணங்கிடும் நாமமதே
மானிடர் முழங்கால் மடங்கும் — மெய்
மேன்மை உயர்திரு நாமமிதே —**இயேசுவின்**

3. சாவு பயங்கள் நீங்கிடவே
சத்துருமேல் ஜெயம் பெற்றிடவே
சோதனையில் பல வேதனையில் — என்
சொந்த அடைக்கல நாமமிதே —**இயேசுவின்**

4. வந்துன்னை சேர்ப்பேனென்று ரைத்த
வல்ல கிறிஸ்தேசுவின் நாமமிதே
நீடூழியாய் நித்ய ராஜ்யத்திலே — தம்
நாமமதே நான் போற்றிடுவேன் —**இயேசுவின்**

15

கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது
கர்த்தரின் சத்தம் மகத்துவமுள்ளது
திரண்ட தண்ணீர் மேல் ஜலப்பிரவாகம் மேல்
தற்பரன் முழங்குகின்ருர் அல்லேலூயா !

சரணங்கள்

1. பலவான்களின் புத்திரரே
பரிசுத்த அலங்காரமாய்
கனம் வல்லமை மகிமை
கர்த்தருக்கே செலுத்திடுங்கள்
பிதாக்குமாரன் பரிசுத்தாவியின்
புது ஆசீர்வாதம் பெருக — கர்த்தரின்

2. கேதூரு மரங்களையும்
லீபனேனின் மரங்களையும்
கர்த்தரின் வலிய சத்தம்
கோரமாக முறிக்கின்றது
சேனை அதிபன் நமது முன்னிலே
ஜெயவீரனுகச் செல்கிருர். — கர்த்தரின்

3. அக்கினி ஜுவாலைகளை
அவர் சத்தம் பிளக்கின்றது
காதேஸ் வனந்திரத்தை
கர்த்தர் சத்தம் அதிரப்பண்ணும்
ராஜாவாகவே கர்த்தர் வீற்றிருப்பார்
ராஜரீகமெங்கும் ஜொலிக்கும். — கர்த்தரின்

4. பெண்மான்கள் ஈனும்படி
பெலத்த கிரியை செய்திடும்
காட்டையும் வெளியாக்கும்
கர்த்தரின் வலிய சத்தம்
பெலன் கொடுத்து சமாதானமீந்து
பரன் எம்மை ஆசீர்வதிப்பார். — கர்த்தரின்

16

என் தேவனாகிய கர்த்தாவே
உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்
அல்லேலூயா - அல்லேலூயா - அல்லேலூயா
- அல்லேலூயா

சரணங்கள்

1. கர்த்தாவே என் சத்துருக்கள் என்னை
மேற்கொண்டு மகிழ விடாதிரும்
நீர் என்னைக் கைதூக்கி எடுத்தபடியால்
நானும்மை என்றென்றும் போற்றுவேன் — என்

2. உம்மை நான் நோக்கிக் கூப்பிட
நீர் என்னைக் குணமாக்கினீர்
பாதாளத்திலிருந்தென்னை ஏறப்பண்ணி
என்னை நீர் உயிருடன் காத்தீர் — என்

3. கர்த்தரின் சுத்தவான்களே
அவரைக் கீர்த்தனம் பண்ணிடுங்கள்
அவர் பரிசுத்தத்தின் நினைவுகளை
ஆடிப்பாடியே கொண்டாடுங்கள் — என்

4. ஆண்டவர் கோபம் ஒரு நிமிஷம்
அவர் தயவோ நீடிய வாழ்வு
சாயங்காலத்தில் அழுகை தங்கும்
விடியற்காலத்தில் களிப்புண்டாகும் — என்

5. அசைக்கப்படுவதில்லை யென்று
அடியேன் வாழ்விலே சொன்னேன்
என் பர்வதத்தை நீர் நிற்கப்பண்ணினீர்
நானோ கலங்கினவனானேன் — என்

6. குழியில் நான் இறங்குகையில்
என் ரத்தத்தால் என்ன லாபம்?
புழுதி உம்மைத் துதித்துக்கொண்டு
உந்தன் சத்தியத்தை அறிவிக்குமோ? — என்

7. கர்த்தாவே உம்மைக் கூப்பிட்டேனே
கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்
என் புலம்பலை நீர் களிப்பாக மாற்றி
களிப்பின் கட்டினால் கட்டினீர் — என்

17

1. இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! என் மீட்பராம்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! என் ராஜனும்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! என் ஜீவனும்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! என் தேவனும்!

பல்லவி

அல்லேலூயா ஓசன்னா! அல்லேலூயா (3 தடவை)
அல்லேலூயா ஓ......ன்னா அல்லேலூயா!

2. இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! மாறிடா நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! கைவிடா நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! வானிலும் நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! பூவிலும் நேசர்
— அல்லே

3. இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! வாழ்விலே அன்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! தாழ்விலே நண்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! பாதையில் மேய்ப்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! வாதையில் மீட்பர்
— அல்லே

4. மாமிசம் பிசாசு லோகம் மாய்கையும்
மாறிப் போகும் யாவும் இயேசுவின் இரத்தத்தால்
லோகவாழ்வின் வாதை நோவும் சாபமும்
போகுமே எல்லாம் மேலான நாமத்தால் — அல்லே

5. சாத்தானை ஜெயித்து வெற்றி ஈந்தாரே
தாசராகச் சேர்த்துத் தஞ்சம் தந்தாரே
பாத்திரங்களாக்கியெமை ஏற்றுக் கொண்டாரே
பரிசுத்தர் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டாரே!
— அல்லே

18

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

சரணங்கள்

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே — என்னை

2. பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலா தெவருமென்னை — என்னை

3. தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீ ரன்றோ உம் உள்ளங்கையில்
வல்லவா எந்தன் புகலிடமே — என்னை

4. திக்கற்றோராய் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம்
நீரறியாத தேதுமுண்டோ ?
என் தலைமுடியும் எண்ணினீரே — என்னை

5. உன்னைத் தொடுவோன் என் கண்மணியைத்
தொடுவதாக உரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே — என்னை

6. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே — என்னை

7. என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடுமே — என்னை

19

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
ஏசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன் — எந்த

சரணங்கள்

1. ஆதியும் நீரே—அந்தமும் நீரே
ஜோதியும் நீரே என் சொந்தமும் நீரே — எந்த
2. தாய் தந்தை நீரே—தாதியும் நீரே
தாபரம் நீரே—என் தாரகம் நீரே — எந்த
3. வாழ்விலும் நீரே—தாழ்விலும் நீரே
வாதையில் நீரே—என் பாதையில் நீரே — எந்த
4. வானிலும் நீரே—பூவிலும் நீரே
ஆழியில் நீரே—என் ஆபத்தில் நீரே — எந்த
5. துன்பநேரத்தில் இன்பமும் நீரே
இன்னல் வேளையில்—என் மாரு நேசரே — எந்த
6. ஞான வைத்தியராம்—ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம்—என் நண்பரும் நீரே — எந்த
7. ஞானமும் நீரே—கானமும் நீரே
நியாயமும் நீரே என் நாதனும் நீரே — எந்த
8. ஆறுதல் நீரே—ஆதாரம் நீரே
ஆசையும் நீரே—என் ஆனந்தம் நீரே — எந்த

9. மீட்பரும் நீரே—என் மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே—என் மகிமையும் நீரே — எந்த

10. தேவனும் நீரே—என் ஜீவனும் நீரே
ராஜ ராஜனும்—என் சர்வமும் நீரே — எந்த

20

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை இயேசுமாராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

சரணங்கள்

1. அற்புதமான அன்பே — என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாரு தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே — தோத்திரம்

2. ஜோதியாய் வந்த அன்பே — பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்ய மதுர அன்பே — தோத்திரம்

3. மாய உலக அன்பை — நம்பி
மாண்ட என்னைக் கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே —தோத்திரம்

4. ஆதரவான அன்பே — நித்தம்
அன்னைபோல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமா தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே — தோத்திரம்

5. வாக்கு மாருத அன்பே — திரு
வார்த்தையுரைத்தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே — தோத்திரம்

21

தேவ தேவனை ஏகமாய் நாம்பாடிப் போற்றிடுவோம்
இயேசுவின் நாமத்தினுல்
பாவரோக சாபம் நீங்கவே
விடுதலையும் அடைந்தோம் — என்றென்றுமாய்

சரணங்கள்

1. உலகம் தரக்கூடா சமாதானமும்
சந்தோஷமும் தந்தார் இயேசுராஜன்
மண்ணுலகில் ஜீவித்தாலும்
விண்ணுலகின்பத்தை அனுபவிக்க
இந்த நற்பாக்கியம் ஈந்தாரே — தேவ

2. துன்பமோ துக்கமோ தொல்லைகளோ
தொடர்ந்து வந்தாலும் திகிலடையோம்
சீயோனின் அரண்களைப்போல்
அசையாது நாம் வாழ்ந்திடுவோம்
சேனையதிபன் நம்மோடிருக்க — தேவ

3. எரிகோவைப்போல் பல எதிர்ப்புகளும்
எழும்பிவந்து நம்மைத் தடுத்தாலும்
முன்வைத்த காலை பின்வைப்பீரோ
வாலிபரே இப்போர் முனையில்
வல்லமையோட வரைத்துதிப்போம் — தேவ

4. மாமிச சிந்தையால் ஆவியிலே
மரணமும் விழுகையும் நேர்ந்திடுமே
பயப்படுவீர் நீர் பயப்படுவீர்
பட்சிக்கும் தேவன் நம்மோடிருக்க
பரிசுத்த சிந்தையில் பலப்படுவீர் — தேவ

5. சீயோனுக்காய் இதோ சீக்கிரத்தில்
ஸ்ரீயேசு ராஜனும் தோன்றிடுவார்
அல்லேலூயா! ஆர்ப்பரிப்போம்!
ஆனந்த நாள் வேகம் நெருங்கிடுதே
ஆயத்தமாய் அவரைச் சந்திப்போம் — தேவ

22

இயேசு மணுளா! ஆசை நீரே
பாரிதில் நினைக்கையில் வேருென்றெனக்கில்லை
பாரிதில் நினைக்கையில் வேருென்றெனக்கில்லையே

சரணங்கள்

1. நீர் என் பாவம் போக்கினீர்
நீர் என் வியாதியைத் தொலைத்தீர்
நித்தியமான விடுதலை ஈந்தீர்
நின் சொந்தமாக்கிக் கொண்டீர் — இயேசு

2. நீர் என் துக்கம் நீக்கினீர்
நீர் என் கண்ணீரைத் துடைத்தீர்
நீதியின் பாதையில் நடத்துகின்றீர்
நீர் என்னைத் தாங்குகின்றீர் — இயேசு

3. நீர் என் பாரம் எடுத்துக் கொண்டீர்
நீங்கிடா சந்தோஷ மீந்தீர்
நின்னிலிருந்து நான் வேறுபிரியாது
நின் சமாதான மீந்தீர் — இயேசு

4. தேனிலும் இனிய நின் வசனம்
தேற்றுகிறதே என் ஆத்துமாவை
தேவ மகிமையாம் ஆவியினுலே
என் பாத்திரம் நிறைகிறதே — இயேசு

5. கானக வழியில் கோரப் புயலால்
காரிருள் சூழ்ந்திடும் வேளை
காருண்யக் கரங்களால் காத்து என்னை
கனிவுடன் ஆதரித்தீர் — இயேசு

6. பார்த்தவர் பலர் பகடி செய்ய
பாடுகள் மிக நிதம் பெருகிட
பாரிதின் இன்னல்கள் மறந்து நானும்
பாரில் மகிழச் செய்தீரே — இயேசு

7. வாரும் மணாளா மேக மீதில்
வாடிடா என்னை வாழ்விக்கவே
வான்முடி மன்னனும் நின்னோடு சேரவே
வாஞ்சிக்குதே என் உள்ளம் — இயேசு

23

பொங்குதே ஆனந்தம் — புவி
எங்குமேயில்லாப் பேரானந்தம் — பொங்குதே

சரணங்கள்

1. வையகம் தந்திடாதின்பம் — இயேசு
ஐயனளித்த தானந்தம்
பொய்யனுக்கோ புகல வொண்ணு நாசம்
மெய்யனகற்றினர் என்பாவ தோஷம்— பொங்குதே

2. பரலோக மேன்மை துறந்து
நரலோக மானிடனாய்ப் பிறந்து
சுரர்க்குமே கிடையாத சிலாக்கியம்
பரமனை நம்புவோர்க்களித்தார் நற்பாக்கியம்
— பொங்குதே

3. குருசினில் சிந்தினரத்தம்
குரு ஏசுவில் உண்டான சுத்தம்
கல்வாரியில் தெய்வ மகத்துவ நேசம்
கல்லென இதயமும் கனிந்திடும் பாசம்—பொங்குதே

4. பாவப் பரிகார நாமம்—கொடும்
ரோகப்பரிகார நாமம்
சர்வலோகத்திலும் மேலான நாமம்
சர்வஜனத்திற்கும் இரக்ஷணிய நாமம் —பொங்குதே

5. வானவன் சபையில் உவந்து—பல
தானங்கள் அன்புடன்தந்து
சரீரமாம் சபை பூரணமாக
சற்குணங்கள் கொண்டு அலங்கரித்தாரே
— பொங்குதே

6. மணவாளன் வேகமேவருவார்
மணவாட்டியை வானில் சந்திப்பார்
ஆ ! இன்பமே எமக்காகுமே அந்நாள்
ஆத்ம நேசர் ஏசுதான் வரும் பொன்னுள்
— பொங்குதே

24

குதூகலம் நிறைந்த நன்னுள்
நடுவானில் மின்னிடுமே
இதுவரை இருந்த துன்பமில்லை
இனி என்றுமே ஆனந்தம்

சரணங்கள்

1. தளகர்த்தனும் இயேசு நின்று
யுத்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினுல் புது பெலனடைந்து
ஜெய கீதங்கள் பாடிடுவோம் — குதூகலம்

2. புவி மீதினில் சரீர மீட்பு
என்று காண்போம் என எங்கும்
மனமகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்
மணவாட்டியாய்ச் சேர்த்திடவே — குதூகலம்

3. ஜெப விழிப்புடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர் நோக்கி
நவ எருசலேமாய் தூயாலங்கிர் தமாய்
நாம் ஆயத்தமாகிடுவோம் — குதூகலம்

4. ஜீவ ஒளி வீசும் கற்களாக
சீயோன் நகர்தனிலே சேர்க்க
அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம் — குதூகலம்

5. தேவதூதர்கள் கானமுடன்
ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினுல் மறு ரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார் — குதூகலம்

25

1. எந்தன் வாயில் புதுப் பாட்டு இயேசு தருகிருர்
எந்தன் உள்ளம் அன்பினுல் நிறையுதே
இன்ப யேசுவே வேகத்தில் வருவார்
எந்தன் துன்ப மெல்லாம் அன்று தீருமே
நான் புதுப் பாட்டு என்றும் பாடுவேன்

பல்லவி

ஆனந்தம் ஆ ! ஆனந்தம் ஆனந்தம்
ஆத்மநாதனேடு எந்தன் வாசம் ஆனந்தம்

2. இப்புவியின் இன்பம் எனக்கொன்றும் வேண்டாமே
ரக்ஷகனும் இயேசுவின் சமூகம் போதுமே
தேவ மகிமையில் பறந்து நான் செல்லுவேன்
அக்ஷணத்தில் இயேசு என்னை சந்திப்பார்
ஆ ! எந்தன் பாக்யம் யார்க்கும் வர்ணிப்பேன்
— ஆனந்தம்

3. இலக்கை நோக்கி எந்தன் ஓட்டம் ஓடியே
லாபமான யாவையும் வெறுத்துத் தள்ளினேன்
பெற்றுக் கொள்ளுவேன் நிச்சயம் பிரதி பலன்
ஆ! லக்ஷா லக்ஷ தூதர் முன்பாக
நான் ஜீவகிரீடம் அன்று சூடுவேன் — ஆனந்தம்

4. ஜீவ ஜல நதியிலே தாகம் தீர்ப்பேனே
ஜீவ விருக்ஷத்தின் பலன் நான் புசிப்பேனே
ஜீவ நாயகன் இயேசுவின் கூடவே
ஜீவ பரதீசில் நானும் இளைப்பாறுவேன்
நான் தூதரோடு அங்கு வாழுவேன் — ஆனந்தம்

5. வீணை வாத்யக்காரரை நான் காணுவேன்
விண் தூத சைன்யத்தையும் அங்கு காணுவேன்
விண்ணதிபனும் மகிமையின் தேவனை
பொன்னின் முடியோடு அதிவேகம் காணுவேன்
நான் விண்ணிலே பாடி போற்றுவேன்
— ஆனந்தம்

26

1. மாறிடா எம்மா நேசரே — ஆ
மாறுதவர் அன்பெந்நாளுமே
கல்வாரி சிலுவை மீதினிலே
காணுதே இம்மா அன்பிதே

பல்லவி

ஆ இயேசுவின் மகா அன்பிதே
அதின் ஆழம் அறியலாகுமோ
இதற்கிணை யேதும் வேறில்லையே
இணையேதும் வேறில்லையே

2. பாவியாக இருக்கையிலே — அன்பால்
பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே — ஆ! இயேசு

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் — தம்
உள்ளம்போல் நேசித்ததினுல்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானரே. — ஆ! இயேசு

4. ஆவியால் அன்பைப் பகர்ந்திட தூய
தேவனின் விண்சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரை சந்திக்க — ஆ! இயேசு

5. நியாய விதி தினமதிலே — நீயும்
நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக
புண்ணியரின் அன்பு வல்லதே — ஆ! இயேசு

6. பயமதை நீக்கிடுமே — யாவும்
பாரினிலே சகித்திடுமே
அது விசுவாசம் நாடிடுமே
அன்பு ஒருக்காலும் ஒழியாதே — ஆ! இயேசு

27

அன்பிலே பூரணரே — எங்கள்
ஆனந்த ரூபா அதிசய ராஜா

அநுபல்லவி

அழகில் சிறந்தோனே — எங்கள்
ஆசையின் கோமானே
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அந்நியராம் எமை அழைத்தணைத்தீரே

சரணங்கள்

1. காத்தீரே கருணையுடன் — எம்
கலக்கங்கள் நீக்கி கனிவுடன் தூக்கி
கதியில்லா ஏழைகளின் — பெரும்
கவலைகளைப் போக்கி
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
ஆறுதலளித்தீர் அனுதினம் துதிப்பேன் -அன்பிலே

2 ஆனந்தம் ஆனந்தமே — உம்
ஆருயிர் ஈந்தீர் அவனியில் வந்தீர்
அலகைதனை வென்றீர் — அவன்
அடிமைகளை மீட்பீர்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அல்லேலூயா பாடி அகமகிழ்ந்திடுவோம் -அன்பிலே

3. கோடையில் குளிர்தருவே
வாடையின் மறைவே ஏழையின் உறவே
கூடுவோம் திருப்பாதம் — தினம்
பாடுவோம் அவர் கீதம்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அன்பே, இன்பே, அன்னையின் மேலாய் -அன்பிலே

4. நித்திய பரிசுத்தரே — உம்
வருகையில் அடியாரைப் பரிசுத்தம் செய்யும்
உத்தம ஜீவிகளாய் — நல்
நித்திய வாழ்வினிலே
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அல்லேலூயா கீதம் பாடி மகிழ்வோம் -அன்பிலே

5. தோத்திரம் துதியுமக்கே — தேவ
அன்பின் ஆழம் அறிந்து புகழ்வோம்
ஆயத்தமுள்ளோர்க்கே — நீர்
அருணோதயமாவீர்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அல்லேலூயா பாடி அகமகிழ்ந்திடுவோம் -அன்பிலே

28

1. உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான் — இது
பரம சிலாக்கியமே

பல்லவி

அவர் செட்டையின்கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார் — அவர்

2. தேவன் என் அடைக்கலமே என் கோட்டையும்
அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே — அவர்

3. இரவின் பயங்கரத்துக்கும் பகலில் பறக்கும்
அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் — அவர்

4. ஆயிரம் பதினாயிரம் பேர்கள் உன்பக்கம்
விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே — அவர்

5. தேவன் உன் அடைக்கலமே ஒருபொல்லாப்பும்
உன்னைச் சேருமோ
ஒருவாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் — அவர்

6. உன் வழிகளிலெல்லாம் உன்னைத் தூதர்கள்
காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடருதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் — அவர்

7. சிங்கத்தின் மேலும் நடந்து - வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடு வித்துக் காத்திடுவார் — அவர்

8. ஆபத்திலும் அவரை நான் - நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் ரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் — அவர்

29

அநாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

அனுபல்லவி

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதாகாலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்.

சரணங்கள்

1. காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்
தூயதேவ அன்பே
இவ்வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார் — இந்த

2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே — இந்த

3. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன் படிக்கைதனை
உண்மையாய்க் கர்த்தர் காத்துக் கொள்வார்
— இந்த

4. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே — இந்த

5. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம் — இந்த

6. ஆனந்தம் பாடி திரும்பியேவா
தூய தேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடையலாம் — இந்த

30

1. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே
தாழ்ச்சி அடையேன் என்றுமே
அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார் —கர்த்தர்

2. ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிறைக்கிறாரே
மகிமையின் நாமத்தினிமித்தம் அவர்
தம் நீதியின் பாதையில் நடத்துகிறார் —கர்த்தர்

3. மரணப் பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே
அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றிடுமே
— கர்த்தர்

4. சத்துருக்கள் முன்பில் எனக்காக
பந்தியொன்றுயத்தஞ் செய்தார்
என்னைத்தம் எண்ணெயால் அபிஷேகித்து
என்பாத்திரம் நிரம்பியே வழியச்செய்தார் —கர்த்தர்

5. ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும்
நன்மை கிருபை தொடரும்
கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன் — கர்த்தர்

31

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றித் துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

சரணங்கள்

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர்தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே — தேவ

2. சத்துருசேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனும் தாவீதின் தேவன் நமக்கு
முன்சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே — தேவ

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடிதன்னில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே அவர்நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே — தேவ

4. காரிருள்போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையின் ஒளியாய்
என்னை நடத்தினர் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே — தேவ

5. வெள்ளம்போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன்நெகேமியா ஆவியை அளித்தே
திடநம்பிக்கை தைரியம் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளதே — தேவ

6. நித்திய தேவனும் சத்தியபரன்தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே — தேவ

32

1. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயினின்றும் இரட்சிப்பார்
பங்கம் வராதென்னை ஆதரிப்பார்

பல்லவி

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை சூழ்ந்திடுதே
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2. நாசியில் சுவாசமுள்ள மாந்தரை
நம்புவதல்ல தம் ஆலோசனை
கோர பயங்கரக் காற்றடித்தும்
கன் மலை மேல் கட்டும் வீடு நிற்கும் — நெஞ்சமே

3. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்
வறட்சி மிகுந்த காலத்திலும்
பக்தன் வலது பாரிசத்திலே
கர்த்தர் தாம் நிற்பதால் அசைந்திடான்—நெஞ்சமே

4. இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெற்றே
ஏகிப் பறந்திடும் பக்தரோடே
சேர்ந்தென்றும் வாழ்ந்திடும் ஐக்கியத்திலே
ஜெயகெம்பீரமே உனக்குண்டே — நெஞ்சமே

5. ஏழை உன் ஆத்மா பாதாளத்தில்
என்றும் அழிந்திட விட்டுவிடார்
தம் சமூகம் நித்திய பேரின்பமே
சம்பூரண ஆனந்தம் பொங்கிடுமே — நெஞ்சமே

6. அங்கே அநேக வாசஸ்தலங்கள்
அன்பின் பிதா வீட்டில் ஜொலிக்குதே
நேர்த்தியான இடங்களில் உந்தன்
நித்திய பங்கு கிடைத்திடுமே — நெஞ்சமே

33

பெலமளித்தெமைப் புது வழிகளில் நடத்திட
தாரகம் நீரல்லவோ — தாரகம் நீரல்லவோ 2

அனுபல்லவி

தாரணியில் எமக்கு தயை புரிந்திடும்
யேசு நாயகன் நீரல்லவோ

சரணங்கள்

1. இருவரொருமித்தெம்மை வரவழைத்திடில்
திருசமுகமளிப்பேன் என்றீரே 2
நீரன்றி எமக்கேது வீரமுலகிலுண்டு
விரைந்து எழுந்திடுவீரே — பெல

2. அதிசயமானவர் என்பதுமது பெயர்
அதிசயம் விளங்கச் செய்யுமே 2
இது சமயம் உமது இதயம் விரும்புவதை
இறைவா வழங்கச் செய்யுமே — பெல

3. பாவிகளுமதண்டை பாவ உணர்வடைந்து
தாகமுடன் அடைந்திட 2
நாவின் அறிக்கையினுல் நவீன இதயம் பெற்று
நாதனைப் பின் சென்றிட — பெல

4. கலங்காதே சிறு மந்தையே என்று
நல்லுரை பெலமாய் உரைக்க வேண்டுமே 2
நலமென்று காண்பதை நமது மத்தியில் செய்து
அலகை அடக்க வேண்டாமோ — பெல

5. வழி நடத்திட எமை வல்லமையுள்ளவரே
வழியாக முன் நடவுமே 2
விழிப்புடனே இருந்து திரும்பி நீர் வரும்போது
களித்திட எமைக் காருமே — பெல

34

தேவன் நமக்கு அடைக்கலமும்
ஆபத்துக் காலத்தில் துணையுமானவர்

அ பல்லவி

பூமி நிலைமாறினுலும் மலைகள் நிலை சாய்ந்தாலும்
— தேவன்

சரணங்கள்

1. ஓர் நதியுண்டு அதன் நீர்க்கால்கள்
தேவனுடைய நகரத்தை சந்தோஷிப் பிக்கும்
அதின் நடுவில் அவர் அது அசையாது
அதிகாலையில் அவர் சகாயம் பண்ணுவார் —தேவன்

2. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிருர்
யாக்கோபின் தேவன் நமக்குயர்ந்த டைக்கலம்
பூமியிலே நடப்பிக்கிற கர்த்தருடைய
செயல்களை வந்து பாருங்கள் — தேவன்

3. பூமியின் கடைமுனை மட்டும்
யுத்தங்களை ஓயப் பண்ணுகிறார்
வில்லை ஒடித்து ஈட்டியை முறித்து
ரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார் — தேவன்

4. அமர்ந்திருந்து அறிந்துக் கொள்ளுங்கள்
நானே தேவன் ஜாதிகளுக்குள்ளே
உயர்ந்திருப்பேன் உயர்ந்திருப் பேன்
உயர்ந்திருப்பேன் நான் பூமியிலே — தேவன்

35

வானங்களும், வானாதி வானங்களும்மைக்
கொள்ளா அற்புதா

சரணங்கள்

1. கிருபையும் நிபந்தனையும் கிருபையாய்க் காத்த
தேவரீர்
பார்த்து வந்தீர் பராமரித்தீர், சேர்த்து இம்மட்டும்
நடத்தினீர் — வானங்

2. எல்லா ஜாதி ஜனங்களும் வல்லரட்சிப்படையச்
செய்யும்
கல்வாரியின் இரத்தத்தினால் பொல்லாததை சுத்தி
செய்யும் — வானங்

3. நீதி நியாயமுள்ள தேவா, ஜோதியில் வாசம்
செய்பவா
வாதிகளை சிநேகிப்பவா போதியதைப் பொழிகிறவா
— வானங்

4. நீரே ராஜாதி ராஜாவே ; கர்த்தாதி கர்த்தரானவரே
எங்களை இராஜாவாக்கினீரே ; ஆசாரியர்களாக்
கினீரே — வானங்

5 பஞ்சம் பட்டினி கொள்ளை நோவில், கெஞ்சுவோரின்
தஞ்சமானவர்
அஞ்சுகிறோம் நெஞ்சில் தேவா, எஞ்சுகிறோம்
மிஞ்சும் தேவா — வானங்

6· கைகளினால் கட்டப்பட்டதில் காணப்படா வல்ல
தேவா
மெய்யாயெம்மில் இருக்கிறவா, செய்கைகளினால்
தெரிகிறவா — வானங்

7. நித்தியவாசியானவா, சத்தியமாம் பெயர்
கொண்டவா
இத்தரையில் எம்மோடுள்ளவா அத்தனே
அல்லேலூயா — வானங்

36

1. உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மை யார் அன்பு கூருவாயா ?
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவை சுமப்பாயா ?

பல்லவி

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்

2. உலக மேன்மை அற்பம் என்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தின்று கூறுவாயா
ஊழியம் செய்ய வருவாயா — உனக்காக

3. இயேசு என்றால் என்ன விலை
என்றே கேட்டிடும் எத்தனை பேர்
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவ அப்பம் கொடுப்பாயா — உனக்காக

4. மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல்
மேய்க்கிறார் பாவ புல் வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடு கின்றாயோ — உனக்காக

5. ஐந்து சகோதரன் அழிகின்றாரே
யாரையாவது அனுப்பிடுவேன்
யாரை நான் அனுப்பிடுவேன்
யார் தான் போவார் எனக்காக — உனக்காக

37

1. பார் போற்றும் வேந்தன் இப்பாழ் உள்ளம் வந்தார்
பூரிப்பால் உள்ளம் யாவும் நிறைத்தார்
பரிசுத்தவான்களோடு இணைத்தார்
இந்த வாழ்க்கை என்றும் இன்ப வாழ்க்கையே

பல்லவி

அல்லேலூயா கீதம் என்றும் பாடுவேன்
ஆர்ப்பரித்து உள்ளம் மகிழ்ந்து பூரிப்பேன்
ஜீவனுள்ள மட்டும் என்றும் கூறுவேன்
அல்லேலூயா ! அல்லேலூயா !

2. பாவ மேகம் யாவும் கலைந்து சென்றதே
பரிசுத்த ஜுவாலை கவர்ந்து கொண்டதே
உடல், பொருள், ஆவி, ஆன்மா யாவுமே
இயேசுவின் சிலுவை அடிவாரமே !
— அல்லேலூயா

3. தாழ்மை உள்ளம் கொண்டு பின் செல்வேன்
நானே
கந்தல் அல்லவோ என் நற்செயல் எல்லாம்
உள்ளத்தில் கிறிஸ்து வந்து தங்கலே
வல்ல தேவன் காட்டும் சுத்தக் கிருபையே !
— அல்லேலூயா

4. நாள்தோறும் நாதன் வழியை ஆசிப்பேன்
விட்டு வந்த பாவ கிடங்கிற்குச் செல்லேன்
என் முன்னே அநேக சுத்தர் செல்கின்ருர்
இப்பர்தையே எந்தன் ஜீவ பாதையே
— அல்லேலூயா

38

இரங்குமே! என் இயேசுவே
இரக்கத்தின் ஐஸ்வரியமே
கூவிக்கதறியே இராவும் பகலுமே
கெஞ்சும் ஜெபங் கேளுமே

சரணங்கள்

1. நித்தம் எமக்காய்ப் பரிந்து பேசும்
நள்ளிரவின் நண்பனே
அன்பின் பிதா முன்னில் இன்று ஜெபித்திடும்
அன்பர் ஜெபங் கேளுமே

2. உற்ருர் பெற்ருரும், குடும்பங்களும்
மற்றும்பலர் மாள்வதைக்
கண்டு சகித்திடா தென்றும் ஜெபித்திடும்
கண்ணீர் ஜெபங்கேளுமே

3. அன்று நினிவே அழிவைக்கண்டே
அன்பே இறங்கினீரே
யோனு உரைத்த தம் ஆலோசனை தந்து
ஏழை ஜெபங்கேளுமே

4. எத்தனை துன்பம் சகித்து மீட்டீர்
எல்லாமே வீணுகுமோ
அத்திமரத்திற்கு அன்று இரங்கினீர்
அந்த ஜெபங் கேளுமே

5. சோதனையினின்று இரட்சித்தீரே
சோதோமின் பக்தனையே
ஆபிரகாம் அன்று வேண்டி ஜெபித்ததோர்
ஆதி ஜெபங் கேளுமே

6. ஐந்து கண்டத்தின் ஜனத்திற்காக
ஐங்காயங்கள் ஏற்றீரே
தேவன் இல்லை என்று கூறி மடிவோரைத்
தேடும் ஜெபங் கேளுமே

7. பிள்ளைகள் அப்பம் கிடைத்திடாதோ
பேதைகள் கேட்டிடவே
மேஜை துணிக்கைகள் தாரும் எனக் கெஞ்சும்
மாந்தர் ஜெபங் கேளுமே

8. தாரும் உயிர்மீட்சி சபைதனில்
சோரும் உள்ளம் மீளவே
கர்த்தாவே உம்ஜனம் செத்தநிலை மாற
பக்தர் ஜெபங் கேளுமே.

39

பேரின்ப நதியே தாகத்தைத்தீர்த்திட
பின்மாரியாகப் பொழிந்திடுமே

சரணங்கள்

1. எலியாவின் தேவன் எங்கே என்றுனே
சலியாமல் ஓடி சால்வை பெற்றுனே
பரலோக ராஜ்யம் பரிசுத்தவான்கள்
பலவந்த மாக்கும் காலம் இதுவே — பேரின்

2. மங்கும் திரிகள் நெறிந்த நாணல்
தேங்கும் தண்ணீர்கள் போன்ற அநேகர்
அனலுமில்லாத குளிருமில்லாத
அனுபவத்தோடே ஜீவிக்கின்றுரே — பேரின்

3. சவுலைப் பவுலாய் மாற்றிடும் தேவா
சடிதி ஒளியால் சந்திக்கும் மூவா
உலரும் எலும்பும் உயிரை அடையும்
உயிர் மீட்கத்தாரும் என் இயேசுநாதா — பேரின்

4. பரிசுத்த ஆவிபெற்றிட வாரீர்
பரிசுத்த தேவ அழைப்பைப்பாரீர்
தேடுங்கள் கிடைக்கும் கேளுங்கள் தருவேன்
தட்டுங்கள் திறப்பேன் என்றுரைத்தாரே —பேரின்

5. ஊனர் குருடர் தீராநோயாளர்
ஊமை செவிடர் பேயால்வாடுவோர்
அற்புத செயலால் ஆரோக்கியமடைய
ஆண்டவரிடமே வேண்டிடுவோமோ — பேரின்

6. சத்தியபரனை பக்தியுடனே
நித்திய யுகமாய்ப் பாடிடுவேனே
ஏதேனின் ஜீவ ஊற்றுகளருகே
ஏழை என்தாகம் தீர்த்திடுவேனே — பேரின்

40

1. விசுவாசம் என்னும் கேடகம்தான்
கிறிஸ்தவ ஜீவிய போராட்டத்தில்
அவசியம் வேண்டும் பேயினை வெல்ல
வல்ல ஓர் நித்திய ஆயுதம் தான் — விசு

2. நீதிமானுவதும் அதனுலே
நித்திய ஜீவனும் அதனுலே
பாவ மன்னிப்பும் மீட்பும் அதனுல்
ரட்சிப்பின் நம்பிக்கை அதனுலே — விசு

3. கடுகுவிதைபோல் விசுவாசம்தான்
கடலிலே தள்ளுமாம் பெருமலையை
கடவுளின் ஈவாம் விசுவாசம்தானே
கரந்தனில் எடுப்போர் கேடகம்தான் — விசு

4. சத்தியம் என்னும் அரைக்கச்சையை
அரையில் கட்டிக் கொள்வோமே
நீதியின் மார்க்க வசத்தைத் தரித்து
சமாதான சுவிசேஷம் அறிவிப்போமே — விசு

5. இரட்சிப்பு என்னும் தலைச்சீராவை
இன்றே தரித்து நிற்போமே
வேத வசன பட்டயம் பிடித்து
தேவனை சந்திக்கச் செல்வோமே — விசு

6. வானிலோர் எக்காள சத்தத்தொனி
வானவர் முழங்கிட வந்திடுவார்
ஆயத்தமுள்ளோர் அவனியில் சென்று
ஆனந்த பாக்கியம் அடைந்திடுவார் — விசு

41

இயேசுவை நாம் எங்கே காணலாம்
அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்

அனுபல்லவி

பனி படர்ந்த மலையின் மேலே பார்க்க முடியுமா ?
கனி நிறைந்த சோலை நடுவே காண முடியுமா ?
— இயேசு

சரணங்கள்

1. ஓடுகின்ற அருவியெல்லாம் தேடியலைந்தேனே
ஆடுகின்ற அலைகடலில் நாடி அயர்ந்தேனே
தேடுகின்ற என் எதிரே தெய்வத்தைக் காணேனே
பாடுபடும் ஏழை நான் அழுது வாடினேனே
— இயேசு

2. வானமதில் பவனி வரும் கார்முகில் கூட்டங்களே
வந்தருளும் இயேசுவையே காட்டிட மாட்டீரோ
காலமெல்லாம் அவனியின்மேல் வீசும் காற்றே நீ
கர்த்தன் இயேசு வாழுமிடம் கூறிட மாட்டாயோ
— இயேசு

3. கண்ணிரண்டும் புனலாக நெஞ்சம் அனலாக
மண்டியிட்டு வீழ்ந்தேன் நான் திருமறை முன்பாக
விண்ணரசர் அன்புடனே கண் விழிப்பாய் என்றுர்
கண் விழித்தேன் என் முன்னே கர்த்தன் இயேசு
நின்றுர் — இயேசு.

42

" இன்னும் என்னில் என்ன குறை ? " *(மத். 19 : 20).*

இராகம் : " சீர்திரியேக வஸ்தே நமோ, நமோ "

பல்லவி

பாரம் சுமந்தவனே வாராய், வாராய் — நித்திய
பரகதி வாழ்வை வந்து பாராய், பாராய் !

அநுபல்லவி

சாரம் இழந்த லோக சடுதி இன்பத்தை நம்பி
சோரமடைவதேனே வாராய், வாராய் பெரும்
— பாரம்

சரணங்கள்

1. ஜீவனின் பாதையை நீ எங்கே, எங்கே — என்று
சிரமம் கொண்டேயலைந்து தேடுவதேன் ?
தேவன் அருளித் தந்த போதனையை முன்வைத்தே
தூய வாழ்வைத் தொடங்கு, அன்றே காண்பாய்
அதை — பாரம்

2. உன்னையே நீ சிநேகித் துண்மை இன்பம் — பெற
உள்ளத்தில் எண்ணுவாயோ, ஐயோ,
வேண்டாம் !
தன்னுயிரை உனக்காய்த் தருவினில் தொங்கி ஈந்த
மன்னவனைப் பின்பற்றி மாற்றுனையும் நேசி
— பாரம்

3. சொன்னவை ஈதெல்லாம் என் சிந்தைதன்னில் —
கொண்டு
சீரிய வழிசென்றேன் இந்நாள் வரை ;
'இன்னும் என்னில் குறைவு என்ன' வென்
றெண்ணுவாயோ ?
ஏனில்லை, இன்னும் உண்டு ; கேளாய் இதோ,
நொந்து — பாரம்

4. பூவின் மகிமையெல்லாம் பின்னே வந்துன் — உயிர்
போகும் தருணம் உன்னை விண்ணேற்றுமோ ?
ஆவியின் நற்கனிகள் அகத்துள் உனக்கிருந்தால்
அடைந்திடுவாய் நற்கதி மெய்யே, மெய்யே இது
— பாரம்

5. உன்னையே நீ வெறுத்து உந்தன் சுமை—கொண்டு
ஓடிப் பரமன் பாதம் முன்னே வைப்பாய் !
தன்னையே தான் வெறுத்து தயவுடன் உன்னை
மீட்ட
தந்தை உனக்கிருக்க தூரம் ஏனோ, இன்னும்
— பாரம்

'சேனாபதி'

43

1. கிறிஸ்தவ ஜீவியம் சௌபாக்கிய ஜீவியம் !
கிறிஸ்துவின் மக்கட்கோர் ஆனந்தஜீவியம் !
கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
கிறிஸ்தேசு நாயகன் கூட்டாளி அல்லவோ !

2. பூலோக இன்பங்கள் மாறிப் போய்விடுமே
லோகத்தாரெல்லாரும் கைவிடுவாரல்லோ !
உற்றார் உறவினர் தள்ளி வெறுத்தாலும்
யோசேப்பின் தெய்வமென் கூட்டாளி அல்லவோ !

3. நம்பும் சகோதரர் வம்பு செய்திடுவார்
அப்பம் புசித்திட்டோர் குதிகாலைத் தூக்குவார்!
ஆருத்துயரிலும் மாருக் கண்ணீரிலும்
ஆற்றிடும் தெய்வமென் கூட்டாளி அல்லவோ!

4. இயேசு என் நல் மேய்ப்பர்
நித்யமாய் ராஜா என் கூட்டாளி அல்லவோ!
என்னே இப்பாரங்கள் என்னே இக்கிலேசங்கள்
கிறிஸ்தேசு ராஜா என் கூட்டாளி அல்லவோ!

5. எக்காள நாதம் நான் கேட்டிடும் வேளையே
கஷ்டங்கள் யாவுமே நீங்கிடும் நேரமே
என்று நீர் வருவீர் எப்போ நீர் வருவீர்
என் கண்ணீர் துடைக்க என் நேசக் கூட்டாளியே!

44

1. உந்தன் சித்தம் போல் நடத்தும்
கர்த்தாவே நீர் நித்தம் உன்னை
எந்தன் சித்தம் போல வேண்டாம்
என் பிதாவே என் யெகோவா

2. இன்பமான வாழ்க்கை வேண்டேன்
இனிய செல்வம் சீரும் வேண்டேன்
துன்பமற்ற சுகமும் வேண்டேன்
நின் தொண்டு செய்யும் அடியேன்

3. மேகஸ்தம்பம் அக்கினிஸ்தம்பம்
ஆம் இவற்ருல் நீர் நடத்தி
அனுதினம் என்னோடிருப்பீர்
ஐயனே கடைக்கனியே

4. நேர் சமனும் வழியோ
சிறு தூரமோ மா தொலையோ
எவ்விதத் துயர் கடலோ
ஏழையின் வாழ்வு எதிலும்

45

1. என் கால்களுக்குத் தீபம் யேசு
என் பாதைக்கு வெளிச்சம் யேசு
என் தாகத்தில் பானம் யேசு
என் சோகத்தில் பானம் யேசு

பல்லவி

எல்லாரிலும் எனக்கெல்லாம் யேசு
வல்லவராம் நல்லயேசு
அல்லேலுயா ஆமென் (2 முறை)

2. என் பிணியில் வைத்தியர் யேசு
என் பணியில் பாத்தியம் யேசு
என் தனிமையில் துணை யேசு
என் இனிமையில் தேன் யேசு — எல்லா

3. என் ரட்சகர் ரட்சிப்பும் யேசு
என் மீட்பரும் மீட்பும் யேசு
என் ஜீவனும் தேவனும் யேசு
என் ஜோதியும் நீதியும் யேசு — எல்லா

4. என் போக்கிலும் வரத்திலும் யேசு
தன் கரத்தில் மறைத்தவர் யேசு
தன் வரங்களை சொரிந்தவர் யேசு
என் தாபரமாம் யேசு — எல்லா

5. அதிகாலையில் எழும்பையில் யேசு
என்னை ஆவலாய் காப்பவர் யேசு
முழு நாளிலும் என்னுடன் யேசு
ஜெயமளிப்பவராம் யேசு — எல்லா

6. என் ஆத்தும இன்பராம் யேசு
என்னை காத்து நடத்திடும் யேசு
பரலோகத்தில் காண்பதும் யேசு
எனக் கெல்லாமுமாம் யேசு — எல்லா

46

நன்றி மறவேல்!

இராகம்: 'தேவப்பிதா எந்தன் மேய்ப்பனல்லோ'

பல்லவி

ஈகையில் பின்னிடும் என்மனமே
இறைவன் ஈவினை எண்ணினையோ

அநுபல்லவி

ஆகுலம் ஏதும்வந் தணுகாமல்
அணைத்தாண் டவரை மறந்தனையே! — ஈகையில்

சரணங்கள்

1. ஆக்கைய மைப்பை யாரளித்தார்,
அதனுள் ஆவியை யார்கொடுத்தார்?
பார்க்கும் இப் பாரினில் உளதெல்லாம்
படைத்தேன் உனக்காய் என்றதும் யார்?
— ஈகையில்

2. காலையில் நீதுயில் எழுந்தமுதல்
கதிரோன் மாமலை பதுங்கும்வரை
வேலையில் உன்நிழல் வடிவம் யார்?
அவரே யறிவாய் இன்னமும் கேள்! — ஈகையில்

3. வாட்டிடும் நோய்க்குநல் வைத்தியரும்
வரும் தீவினைக் கரணும் அவரே
மீட்டுயிர் காத்துனை மேய்த்துவரும்
மறையோன் அருளை மறந்ததும் ஏன்? — ஈகையில்

4. சுருங்கிடக் கூறிடில் உன்னளவில்
உடனுன் பங்கிறைக் கீந்திடு; போ!
பரிசுத்தப் பங்கினை வஞ்சனையால்
மறைத்தோர் கதியை மறை விளம்பும் — ஈகையில்

'சேனாபதி'

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்

அனுபல்லவி

எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத்தேற்றிடும் ஔஷதம்

சரணங்கள்

1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்தப்பசும்பொன் தெளிந்திடும் தேன்
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்துமா உயிரடையும் — சத்தியவேதம்

2. பேதைகளிடம் ஞானம் அருளும்
வேதப் புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும் — சத்தியவேதம்

3. வேதப்பிரியர் தேவப்புதல்வர்
சேத மடைவர் நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார் — சத்தியவேதம்

4. உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங்கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்
கன மடைய வழி நடத்தும் — சத்தியவேதம்

5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன் மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இருபுறமும் கருக்குள்ளதே — சத்தியவேதம்

6. வானம் அகலும் பூமி அழியும்
தேவ வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும் — சத்தியவேதம்

48

தேவாதி தேவன் ராஜாதி ராஜன்
பாவ உலகினில் வந்துதித்தார்

அனுபல்லவி

ஏரோது மாளிகை தேடாத மாராஜன்
ஏழைத் தொழுவத்தில் வந்துதித்தார்

சரணங்கள்

1. வானத்தில் தோன்றும் ஓர் நட்சத்திரம்
வானசாஸ்திரிகள் முன்னில் சென்றாலும்
பாதை தவறியே சோகமடைந்த பின்
பாலகன் இயேசுவைக் கண்டடைந்தார் — தேவாதி

2. அன்னை மரியாள் அளவில்லாத
ஆசீர்வாதங்கள் மிக அடைந்தாள்
அந்தக் கிருபைகள் சொந்தமுடன் பெற
ஆண்டவர் இயேசுவைக் கண்டடைவோம்
— தேவாதி

3. சத்திரத்திலே இடமில்லையே
சத்திய தேவன் தலைசாய்க்கவே
தாழ்மை சொரூபியே தாழ இறங்கியே
தங்கும் தொழுவத்தைக் கண்டடைவோம்
— தேவாதி

4. ஆண்டவர் பிறந்த பெத்தலேகேம்
ஆயிரங்களில் சிறிய இடம்
இஸ்ரவேல் ராஜனை இம்மானுவேலனை
இன்பமுடன் தேடிக் கண்டடைவோம்

5. கண்ணாரக் கண்டேன் உம் ரட்சண்யத்தை
காலா காலமாகக் காத்திருந்தேன்
என்று சிமியோன் தன் கையில் எடுத்து நம்
இயேசுவை வாழ்த்தியே கண்டடைந்தான்
— தேவாதி

6. தள்ளின கல்லே தலைக்கல்லாக
தாமதமின்றி வருகின்றவர்
ஆயர் குடிலிடைப் பாலகனாய்த் தோன்றும்
தூய பிதா முகங் கண்டடைவோம் — தேவாதி

49

பிறந்தார், பிறந்தார்
வானவர் புவிமானிடர் புகழ்
பாடிடப் பிறந்தார்

சரணங்கள்

1. மாட்டுத்தொழுவம் தெரிந்தெடுத்தார்
மாதேவ தேவனே
மேன்மை வெறுத்தார் தாழ்மைதரித்தார்
மாதியாகியாய் வளர்ந்தார் —பிறந்தார்

2. பாவ உலகில் மானிடர் மேல்
பாசம் அடைந்தவரே
மனக்காரிருளை எம்மில் நீக்கிடும்மெய்
மாஜோதியாய்த் திகழ்ந்தார். —பிறந்தார்

3. பொறுமை தாழ்மை அன்புருக்கம்
பெருந்தன்மை உள்ளவரே
மரணம் வரையும் தன்னைத்தாழ்த்தினதால்
மேலான நாமம் பெற்றார். —பிறந்தார்

4. கந்தைத்துணியோ கர்த்தருக்கு
கடும் ஏழ்மைக் கோலமதோ
விலையேறப்பெற்ற உடை அலங்கரிப்பும்
வீண் ஆசையும் நமக்கேன் —பிறந்தார்

5. குருவைத் தொடரும் சீஷர்களும்
குருபோல மாறிடுவார்
அவர் நாமம் தரித்தவர் யாவருமே
அவர் பாதையில் நடப்போம் — பிறந்தார்

6. இயேசு பிறந்தார் உள்ளமதில்
இதை எங்கும் சாற்றிடுவோம்
புசிப்பும் குடிப்பும் தேவ ராஜ்யமல்ல
பரன் ஆவியில் மகிழ்வோம். — பிறந்தார்

50

இயேசு என்னும் இனிய நாமம்
இந்த காசினியோர் அறிய நாமும்
சுவிசேஷமதைப் பாரினிலே காட்டுவோம்
விசுவாசமதை நாட்டில் நிலைநாட்டுவோம்.

சரணங்கள்

1, பாவத்தைப் போக்க சாபத்தை நீக்க
பக்தராய் வந்தார் பரிசுத்தராய் வந்தார் — இயேசு

2. நிந்தை சுமந்து கந்தை அணிந்து
விந்தையாகவே அவர் சொந்தமாய் வந்தார்
— இயேசு

3. ஆதிபன் மேன்மை அத்தனையும் வெறுத்து
ஆயர் அறிய அவர் ஆக்குடில் வந்தார் — இயேசு

4. மாட்சி கெடாத மாது மரியின்
பாலனாய் வந்தார் அனுகூல னாய் வந்தார் —இயேசு

5. வேதாளப் பேயை பாதாளம் வரையில்
ஒழிக்க வந்தார் அதை அழிக்க வந்தார் — இயேசு

6. பரிசுத்த வான்கள் பருகிக் களிக்க
இகத்தில் வந்தார் அவர் அகத்தில் வந்தார்
— இயேசு

7. வாதை நோய் துன்பம் யாவையும் நீக்க
கர்த்தராய் வந்தார் தம்மைத் தத்தமாய்த் தந்தார்
— இயேசு

51

காரிருள் வேளையில் கடுங்குளிர் நேரத்தில்
ஏழைக் கோலம தாய்
பாரினில் வந்த மன்னவனே உம்
மாதயவே தயவு

1. விண்ணுலகில் சிம்மாசனத்தில்
தூதர்கள் பாடிடவே
வீற்றிருக்காமல் மானிட னுனது
மாதயவே தயவு — காரிருள்,

2. விண்ணில் தேவனுக்கே மகிமை
மண்ணில் சமாதானம்
மனுடரில் பிரியம் மலர்ந்தது உந்தன்
மாதயவே தயவு — காரிருள்

3. விந்தை விதந்தனில் வந்தவனே,
வானவனே, நாங்கள்
தந்தையின் அன்பைக் கண்டதும் உந்தன்
மாதயவே தயவு —காரிருள்

52

அதிகாலையில் பாலனைத்தேடி
செல்வோம் நாம் யாவரும் கூடி — அந்த
மாடடையும் குடில்நாடி
தேவபாலனைப் பணிந்திடப்பாடி
வாரீர் வாரீர் வாரீர் நாம் செல்வோம்

1. அன்னை மரியின் மடிமேலே
மன்னன் மகவாகவே தோன்ற – விண்
தூதர்கள் பாடல்கள் பாட
விரைவாக நாம் செல்வோம் கேட்க — அதி

2. மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே
அந்த முன்னணை முன்னிலைநின்றே — தம்
சிந்தை குளிர்ந்திட போற்றும்
நல்ல காட்சியைக் கண்டிட நாமே — அதி

3. அன்பின் வடிவாய்ப் புவி மீதில்
அருளானந்தம் ஈந்திடவென்றே
தந்தைப் பரனின் திருமைந்தன்.
தம்மைத் தாழ்த்திய விந்தையைப் பாடி —அதி

53

எந்தன் இயேசுவின் அன்பதையே
எண்ணும் வேளையில் ஆனந்தமே

சரணங்கள்

1. கடந்த நாட்களில் கைவிடாமலே
கண்ணின் மணிபோல் காத்ததினால்
மனப் பூர்வமாய்த் துதிப்பேன் மகிழ்வுடனே
மன்னன் கிறிஸ்தேசுவையே — எந்தன்

2. அழைத்த பாதையில் தளர்ந்த வேளையில்
அன்பின் மொழியால் பேசினரே
புது ஜீவனும் நிறைவாய் அளித்ததினால்
புண்ணியனைப் போற்றிடுவேன். — எந்தன்

3. வறுமை வியாதியும் வலிய தோல்வியும்
வந்த வேளையில் தாங்கினரே
ஜெய கீதமே தினமும் எவ்வேளையிலும்
ஜெயத்துடன் பாடிடுவேன். — எந்தன்

4. நெகிழ்ந்த கரங்களை உயிர்த்து இதுவரை
இழந்த வரங்களும் ஈந்ததினால்
அவர் சேவையே புரிந்து கனம் மகிமை
அவருக்கே செலுத்திடுவேன் — எந்தன்

5. நிறைந்த ஜோதியாய்த் திறந்த வானிலே
நீதி சூரியன் தோன்றிடுவார்
மறு ரூபமே அடைந்தே பறந்திடுவேன்
மட்டற்ற பேரின்பமுடன் — எந்தன்

54

1. எந்தன் உள்ளம் புதுக்கவியாலே பொங்க
இயேசுவைப் பாடிடுவேன் :
அவர் நாமம் ஊற்றுண்ட பரிமளத்தைலம்
அவரையே நேசிக்கிறேன்

பல்லவி

அல்லேலூயா துதி அல்லேலூயா — எந்தன்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய
கர்த்தனைக் கொண்டாடுவேன்

2. சென்ற காலம் முழுவதும் காத்தாரே ஓர்
சேதமும் அணுகாமல்
சொந்தமாக ஆசீர் பொழிந்தெனக் கின்றும்
சுக பெலன் அளித்தாரே — அல்லேலூயா

3. சில வேளை இமைப் பொழுதே தம் முகத்தை
சிருஷ்டிகர் மறைத்தாரே
கடும் கோபம் நீக்கித் திரும்பவும் என்மேல்
கிருபையும் பொழிந்தாரே — அல்லேலூயா

4. பஞ்சகாலம் பெருகிட நேர்ந்தாலும் — தாம்
தஞ்சமே ஆனாரே
அங்கும் இங்கும் நோய்கள் பரவி வந்தாலும்
அடைக்கலம் அளித்தாரே — அல்லேலூயா

5. களிப்போடு விரைந்தெம்மைச் சேர்த்திட — எந்தன்
கர்த்தரும் வருவாரே
ஆவலோடு நாமும் வானத்தை நோக்கி
அனுதினம் காத்திருப்போம் — அல்லேலூயா

55

1. சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே
சர்வ வல்ல ஏசு என்னை நேசித்தார்
பெற்றதாம் நன்மைகள் ஒவ்வொன்ருய் எண்ணியே
பேரன்பு பொங்க என்றும் பாடுவேன்.

பல்லவி

ஆர்ப்பரித்து நான் ஆனந்தங்கொள்வேன்
ஆண்டவர் சமூகம் என்னைத் தேற்றுதே
துன்பங்கள் யாவுமே துரிதமாய் நீங்குதே
இன்ப யேசு நாமத்தில்

2. பேரின்ப கீதம் என்னில் பொங்குதே
போன நாட்கள் என்னைக் கர்த்தர் தாங்கினுர்.
சோதனை சூழ்ந்து என் நம்பிக்கை குன்றினும்
சோர்ந்தழியாமல் என்றும் காத்ததால்
— ஆர்ப்பரித்து

3. இரட்சிப்பின் கீதம் என்னில் பொங்குதே
இரட்சகர் என் பாவம் முற்றும் மன்னித்தார்
மானிடர் மாறினும் அன்பை விட்டோடினும்
மாதேவ அன்பில் என்னைக் காத்ததால்
— ஆர்ப்பரித்து

4. ஆனந்தக் கீதம் என்னில் பொங்குதே
ஆரவாரத்தோடே இயேசு தோன்றுவார்
ஆவலாய் விழித்தே ஆவியில் ஜெபித்தே
ஆயத்தமாய் நான் காத்து நிற்பதால்
— ஆர்ப்பரித்து

5. சீயோனின் கீதம் என்னில் பொங்குதே
சீக்கிரம் வந்தென்னைச் சேர்த்துக்கொள்வார்
பொன்முடி வேந்தனும் எந்தை என் இயேசுவின்
பொன் மாளிகை நான் கிட்டி சேர்வதால்
— ஆர்ப்பரித்து

56

1. போற்றிடுவேன் பராபரனை துதி
சாற்றிடுவேன் சர்வ வல்லவரை
ஸ்தோத்திர பாத்திரன் இயேசுவையே
நேத்திரமாய் என்றும் பாடுவேன்.

பல்லவி

ஆ! ஆர்ப்பரித்தே அகமகிழ்வேன்
ஆண்டவர் அன்பதை எங்கும் கூறுவேன்
கண்மணிபோல் கருத்துடனே
கைவிடாமல் என்னைக் காத்தனரே.

2. எத்தனையோ பல நன்மைகள்
இத்தனை ஆண்டுகளாய் அளித்தார்
கர்த்தரே நல்லவர் என்பதையே
கருத்துடனே ருசித்திடுவேன் — ஆ

3. பயப்படாதே என்றுரைத்தனரே
பரிசுத்த ஆவியானவரே
வெள்ளம்போல் சத்துரு வந்திடினும்
விரைந்தவரே கொடியேற்றினர். — ஆ

4. பொருத்தனைகள் துதி பலிகள்
பணிவுடன் செலுத்தி ஜெபித்திடுவேன்
ஆபத்துக் காலத்தில் கூப்பிடுவேன்
ஆண்டவரே செவி கொடுப்பார் — ஆ

5. நித்தமும் போதித்து நடத்தி
நித்திய ஆலோசனை அளிப்பார்
முடிவிலே மகிமையில் சேர்த்திடுவார்
மகிழ்ந்திடுவேன் நித்தியமாய் — ஆ

57

இம்மட்டும் கிருபை தந்த தேவா
இனிமேலும் கிருபை தாரும் மூவா
இன்றும் என்றும் உம்மில் நான் நிற்கவே
இயேசு நீர் என்னில் உருவாகவே
உம்மைக் காணவே.

சரணங்கள்

1. சோதிக்கப்பட்ட தூய தேவா
சோதனையில் பெலன் தாரும் மூவா
துன்பங்கள் தொல்லை சூழ்கையிலே
இன்ப ஒளி என்னில் வீசியே
இருள் நீக்கும். — இம்மட்டும்

2. பக்தியில்லை நான் ஆராதிக்க
யுக்தியில்லை உம்மை துதிக்க
சத்திய ஆவியின் வல்லமையால்
சக்தியைத் தாரும் உத்தமராய்
உம்மைத் துதிக்க. — இம்மட்டும்

3. நன்றியால் உள்ளம் பூரிக்குதே
என்றும் உம்மில் நான் நிற்கவே
அன்றுன் உதிரம் சிந்தினதால்
இன்றும் உன் அன்பு பெரு வெள்ளமாய்
புரண் டோடுதே. — இம்மட்டும்

4. சத்துருவான சாத்தான் என்னையே
நித்தம் நெருங்கி ஏய்க்கையிலே
கர்த்தனே ஜெயம் பெற்றிடவே
சத்திய ஆவி வல்லமையை
என்னில் ஊற்றும் — இம்மட்டும்

5. ஜெபத்தின் ஆவி என் அகத்தில் ஊற்றும்
ஜெபத்தினல் உலகை நான் ஜெயிக்க
உன்னதா உலகை நீர் ஜெயித்தீர்
உன் நாமத்தினல் நான் ஜெயிப்பேன்
அல்லேலூயா — இம்மட்டும்

58

மீட்பர் இயேசு குருசில் தொங்கினரே
மூன்ருணி மீதில் காயம் அடைந்தே

சரணங்கள்

1. லோகப்பாவம் தீர்க்கப் பலியான
தேவ ஆட்டுக்குட்டியானவர்
சொந்தமான இரத்தம் சிந்திமீட்டு
இந்தளவாய் அன்பு கூர்ந்தவர் — எம்மில்

2. இயேசுவே கல்வாரி சிலுவையில்
ஏறி ஜீவன் தந்திராவிடில்
ஏழையான் என் பாவப் பாரங்களே
எங்கு சென்று தீர்த்துக் கொள்ளுவேன் — பூவில்

3. தேவனே என்னை ஏன் கைவிட்டீரோ
என்று இயேசு கதறினரே
பாவத்தால் பிதாவின் முகத்தையும்
பார்க்கவும் முடிய வில்லையோ — அவர்

4. அன்னை தந்தை யாவரிலும் மேலாய்
அன்பு கூர்ந்தார் அண்ணல் இயேசுவே
ஆச்சரிய தேவ அன்பைப் பாட
ஆயிரம் நாவுகள் போதுமோ — பதி

5. பாவப் பாரம் லோகக் கவலைகள்
தாவி உன்னைச் சூழ்ந்த போதிலும்
தேடி நாடி ஓடி வந்தால் உன்னைத்
தேற்றி ஆற்றி தாங்குவார் அவர் — இப்போ

6. கோரமாய்ச் சிலுவை காட்சி கண்டால்
கல்மனமும் உருகிடுமே
மாய லோக ஆசை வஞ்சிக்குமே
மாறிடாத இயேசு போதுமே — என்றும்

59

பாவிக்குப் புகலிடம் இயேசு ரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே

அனுபல்லவி

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே — பாவி

சரணங்கள்

1. காட்டிக் கொடுத்தான் முப்பது வெள்ளிக்
காசுக்காகவே கர்த்தன் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல்கதா மலைக்கு இயேசுவை — பாவி

2. கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன் போல்
குற்றமற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும் பசி தாகமும்
படுங்காயமும் அடைந்தாரே — பாவி

3. கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
க்ரீடம் முட்களில் பின்னிட சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதைக் காணும் உள்ளம் தாங்குமோ — பாவி

4. உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடிவா — பாவி

5. பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில்
கண்டு நீ மனம் கலங்குவதேன்
கர்த்தன் இயேசுவண்டை ஓடிவா — பாவி

6. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
வாருங்கள் என்னண்டையில் என்கிறார்
இளைப்பாறுதல் தரும் இயேசுவை
இன்று தேடி நாடி நம்பி வா.

60

என்ன தியாகம்! என் கல்வாரி நாயகா
என்னையும் உம்மைப் போல் மாற்றிடவோ — என்ன

சரணங்கள்

1. விண் தூதர் போற்றிடும் உம் — பிதாவையும்
விட்டிறங்கி வந்தீரே
மாட்டுக் கொட்டிலோ வாஞ்சித்தீரையா!
மானிடர் மேல் அன்பினால் — என்ன

2. ஜெனித்த நாள் முதலாய் — கல்வாரியில்
ஜீவனை ஈயும் வரை
பாடுகள் உம் பங்காய் கண்டீரைய்யா!
பாவியை மீட்பதற்காய் — என்ன

3. தலையைச் சாய்த்திடவும் — உமக்கு ஓர்
தலமோ எங்குமில்லை
உம் அடிச்சுவட்டில் நான் செல்லவோ
முன் பாதைக் காட்டினீரே — என்ன

4. தாய் தந்தை வீடும் நாடும்
தனக்குள்ள தெல்லாம் வெறுத்து
அனுதினம் குருசைச் சுமந்தோரல்லோ
அப்போஸ்தலர் என்றீரே — என்ன

5. பாடுகளல்லோ உம்மை மகிமையில்
பூரணமாய் சேர்த்ததே
உம்மோடு நானும் பாடு சகிப்பேன்
என் ஜீவனையும் வைத்தே — என்ன

6. இன்பம் எனக்கினியேன் — என் அருமை
இயேசுதான் என் பங்கல்லோ!
நேசரின் பின்னே போகத் துணிந்தேன்
பாசம் என்னில் வைத்ததால் — என்ன

61

ஏழை மனுவுருவை எடுத்த
ஏசுராஜன் உன்னண்டை நிற்கிறார்
ஏற்றுக் கொள் அவரைத் தள்ளாதே

சரணங்கள்

1. கைகளில் கால்களில் ஆணிகள் கடாவ
கடும் முள்முடி பொன் சிரசில் சூடிட
நிந்தையும் நிந்தையும் வேதனையும் சகித்தார்.
சொந்தமான இரத்தம் சிந்தினார் உனக்காய்
கனிவுடன் உன்னை அழைக்கிறாரே —ஏழை

2. அவர் தலையும் சாய்க்க ஸ்தலமுமில்லை
அன்று தாகத்தைத் தீர்க்கவோ பானமுமில்லை
ஆறுதல் சொல்லவோ அங்கு ஒருவரில்லை
அருமை ரட்சகர் தொங்குகிறார் தனியே
அந்தப் பாடுகள் உன்னை மீட்கவே —ஏழை

3. அவர் மரணத்தால் சாத்தானின் தலை நசுங்க
அவர் ரத்தத்தால் பாவக்கறைகள் நீங்க
உந்தன் வியாதியும் வேதனையும் ஒழிய
நீயும் சாபத்தினின்று விடுதலையடைய
சிலுவையில் ஜெயித்தார் யாவையும் —ஏழை

4. மாயை உலகம் அதையும் நம்பாதே
மனுமக்கள் மனமும் மாறிப்போகுமே
நித்திய தேவனை நேசித்தால் இப்போதே
நிச்சயம் சந்தோஷம் பெற்று நீ மகிழ
நம்பிக்கையோடே வந்திடுவாய் — ஏழை

5. இன்னமும் தாமதம் உனக்கேன் மகனே
இன்ப இயேசுவண்டை எழுந்து வாராயோ
இன்று உலகம் தரக்கூடா சமாதானத்தை
இன்று உனக்குத் தரக்காத்து நிற்கிறாரே.
அண்ணல் இயேசுன்னை அழைக்கிறாரே — ஏழை

62

ஆதிமெய் தேவனே உம் அன்பிற்கோர்
எல்லையுண்டோ
நீதியாம் ஜோதி அநாதி தேவனே — உம்
நீதிக்கோர் எல்லையுண்டோ

சரணங்கள்

1. எத்தனையோ பாவங்கள் அத்தனை அகற்றினீர்
பத்திலோர் பங்கு போதாதென்றெண்ணி — நான்
தத்தம் செய்தேன் உமக்கே — ஆதி

2. எத்தன் எனக்காக இன்றுயிர் கொடுத்தீரே
எதைச் செலுத்துவேன் இயேசுவின் அன்பிற்கு
இதயம் ஈடாகுமோ — ஆதி

3. ஆழ்ந்த கடலிலே அமிழ்ந்து போன என்னை
தூக்கி எடுத்த உம் அன்பை நினைக்க என்
துதிகள் தான் போதுமோ — ஆதி

4. பாவத்தில் மாண்ட என்னைக்கோபத்தில் அழிக்காமல்
இரட்சித்த உந்தன் அன்பை நினைத்து நான்
பட்சமாய்ப் போற்றிடுவேன் — ஆதி

5. கெத்சமனே பூங்காவில் பட்சமாய் வேண்டி நிற்கும்
இரத்த வெள்ளத்தில் கத்திக் கதரும்—மெய்
சத்தம் தொனித்திடுதே —ஆதி

6. அலையும் புயலுமாய் அமிழ்த்தி வீழ்த்துகையில்
நான்தான் பயப்படாதிருங்கள் என்ற உம்
அன்பின் தொனி கேட்குதே — ஆதி

7. எண்ணும் நன்மை ஏதுவும் என்னிலே இல்லை ஐயா
பின்னே ஏனென்னை நேசித்தீரோ
என்னில் கொண்ட உம் அன்புதானே— ஆதி

63

அந்தோ! கல்வாரியில்—அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்கினார்

சரணங்கள்

1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமைக் குருசைத் தெரிந்தெடுத்தாரே
மாய லோகத்தோடழியாது யான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே
—அந்தோ

2. அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே —அந்தோ

3. முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
குருதி வடிந்தவர் தொங்கினார்
வருந்தி மடிவோரையும் மீட்டிடவே — அந்தோ

4. அதிசயம் இது இயேசுவின் தியாகம்
அதிலும் இன்பம் அன்பரின் தியானம்
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் என்றும் தொடர்ந்திடவே
—அந்தோ

5. சிலுவைக் காட்சியை கண்டு முன்னேறி
சேவை புரிவேன் ஜீவனும் வைத்தே
என்னை சேர்த்திட வருவேன் என்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன்
— அந்தோ

64

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின ரத்தம் புரண்டோடியே
நதி போலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா — (2)

சரணங்கள்

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷப் பூவில்
கர்த்தாவின் அன்பண்டை வா — சிலுவை

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்மம் நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே — சிலுவை

3. பாவமனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப்பரிகாரி கர்த்தர் இயேசுநாதர்
பாவமெல்லாம் சுமந்தார் — சிலுவை

4. நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாராயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய் — சிலுவை

5. தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தைத்தீர்க்க வாரும்
ஜீவத்தண்ணீரான கர்த்தர் இயேசுநாதர்
ஜீவன் உனக்களிப்பார். — சிலுவை

65

இயேசுவின் மார்பினில் — சாருவேனே
துன்பம் துக்கம் கண்ணீர் — மறப்பேனே

சரணங்கள்

1. காரிருள் மூளும் நேரத்தினில்
கர்த்தா உன் பாதம் அண்டி நின்றேன்
எந்தனை மீட்டிட உந்தனை ஈந்தீரே
அன்பின் சொரூபி என் யேசுநாதா 2 — இயேசு

2. நீசச் சிலுவை மீதினிலே
என்பாவம் போக்கத் தொங்கினீரே
ஆருயிர் நாதனே எத்தனை வாதைகள்
என்னை நீர் மந்தையில் சேர்ந்திடவோ 2 —இயேசு

3. கல்வாரி நாதா நின் இரத்தத்தை
சிந்தினீரே இப்பாவிக்காக
கைகால்கள் ஆணிகள் கடாவப் பட்டதே
முள் முடி சூட்டியே நின் சிரசில் 2 —இயேசு

4. ஜீவனை விட்ட என் நேசரே
ஒப்புவித்தேன் என்னை உமக்காய்
கரத்தில் ஏந்தியே பொற்கிரீடம் சூட்டியே
விண்ணிலும் சேர்ப்பீரே பாவியென்னை 2 —இயேசு

66

கொல்கொதாவே கொலை மாமே
கோர மரணம் பாராய் மனமே

அனுபல்லவி

கோர மனிதர் கொலை செய்தார்
கோரக் காட்சி பார் மனமே (2) — கொல்

1. கந்தை அணிந்தார் நிந்தை சுமந்தார்
கள்ளர் நடுவில் கொலை மரத்தில்
எந்தனை மீட்க இத்தனை பாடுடன்
எந்தன் ஜீவ நாயகா (2) — கொல்

2. என்னை மீட்ட கொலை மாமே
அன்னையே நான் என்ன செய்வேன்
என்னை உமக்கே ஒப்புவித்தேன்
என் றென்றுமாய் நான் வாழ — கொல்

3. வானம் பூமி ஒன்றாய் இணைத்த
வல்ல தேவா உமக்கே சரணம்
வாடி வாடிக் கொலை மரத்தில்
நிற்கும் காட்சி பார் மனமே — கொல்

4. வெள்ளை யங்கி தரித்தவர்களே
எங்கே இருந்து நீர் வந்தீர் சொல்லுங்கள்
துன்பக் குகையில் வெந்தே போகாமல்
தங்கம் போலவே வந்தோம் — கொல்

5. அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா என்றென்றும் — கொல்

67

ஏறுகின்றார் தள்ளாடித் தவழ்ந்து களைப்போடே
என் ஏசு குருசைச் சுமந்தே
என் நேசர் கொல்கதா மலையின் மேல் நடந்தே
— ஏறுகின்றார்

சரணங்கள்

1. கன்னத்தில் அவன் ஓங்கி அடிக்க
சின்னப்பிள்ளை போல் ஏங்கி நிற்கின்றார்
அந்தப் பிலாத்தும் கையைக் கழுவி
ஆண்டவரை அனுப்புகின்றான் — ஏறுகின்றார்

2. மிஞ்சும் பெலத்தால் ஈட்டி எடுத்தே
நெஞ்சைப் பிளந்தான் ஆ ! கொடுமை
இரத்தமும் நீரும் ஓடி வருதே
இரட்சகரை நோக்கியே பார் — ஏறுகின்றார்

3. இந்தப் பாடுகள் உந்தன் வாழ்வுக்காய்
சொந்தப்படுத்தி ஏற்றுக் கொண்டார்
நேசிக்கிறாயோ ஏசு நாதரை
நேசித்து வா குருசெடுத்தே — ஏறுகின்றார்

4. சேவல் கூவிடும் மூன்று வேளையும்
சொந்த குருவை மறுதலித்தான்
ஓடி ஒளியும் பேதுருவையும்
தேடி அன்பாய் நோக்குகின்றார் — ஏறுகின்றார்

5. பின்னே நடந்த அன்பின் சீஷன் போல்
பின்பற்றி வா சிலுவை வரை
காடியைப்போலக் கசந்திருக்கும்
கஷ்டங்களை அவரிடம் சொல் — ஏறுகின்றார்

6. செட்டைகளின் கீழ் சேர்த்தணைத்திடும்
சொந்தத் தாயின் அன்பதுவே
எருசலேமே! எருசலேமே
என்றழுதார் கண் கலங்க — ஏறுகின்றார்

68

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா!
ஜெயித் தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமா னாரே

சரணங்கள்

1. கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே — உயிர்

2. மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே — உயிர்

3. எம்மா ஊர் சீஷர்களின்
எல்லா மன இருள் நீக்கினாரே
எம் மனக் கலக்கங்கள் நீக்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே — உயிர்

4. மரணமே கூர் எங்கே?
பாதாளமே ஜெயமெங்கே?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம் — உயிர்

5. ஆவியால் இன்றும் என்றும்
ஆ ! எம்மையும் உயிர்ப்பிக்கவே
ஆவியின் அச்சாரம் எமக்களித்தாரே
அல்லேலூயா துதி சாற்றிடுவோம் — உயிர்

6. பரிசுத்த மாகுதலே
பயத்தோடென்றும் காத்துக்கொள்வோம்
எக்காளம் தொனிக்கையில் மறுரூபமாக
எழும்புவோமே மகிமையிலே — உயிர்

69

பாவம் பெருகுதே !
பாரும் பரன் இயேசுவே !
அழியும் மனுக்குலம்
அதையும் இரட்சிப்பீரே !

சரணங்கள்

1. ஆத்தும இரட்சிப்பிழந்தவர்
ஆயிரம் ஆயிரமாய்
அன்ருடகம் இந்த மண்ணடியில்
அழிந்து சாகின்ருரே. — பாவம்

2. இரட்சிப்பின் நற்செய்தி கேட்பவர்
எச்சரிப்பை வெறுத்து
இரட்சகர் இயேசுவை இழந்தோராய்
இன்றும் கெட்டழிகின்ருர் — பாவம்

3. தானியேல் போல ஜெபித்திடும்
தாசர் பலர் மறைந்தார்
திறப்பின் வாசலில் நிற்கும் சிலர்
தூங்கிக் களைத்துப் போனுர் — பாவம்

4. எமது காரியமாகவே
யாரை அனுப்பிடுவேன்
என்றவர் அழைக்கும் இன்பசத்தம்
என்னுள்ளம் தொனிக்குதே — பாவம்

5. ஜீவனை வெறுத்துத் தியாகமாய்
சேவையும் செய்திடுவேன்
ஜீவனுக் கீடாக ஜனங்களை
ஜீவ தேவன் தருவார். — பாவம்

6. வெறுங்கையாய்ப் பரலோகத்தில்
வந்திடேன் இயேசுநாதா
ஆத்தும ஆதாயம் செய்திடவே
ஆசீர் பொழிந்தனுப்பும் — பாவம்

70

1. என் மனமே நீ யேசுவை நேசி
அவரை ஆசி ஆனந்தமடைவாய்
எந்த நேரமும் நீயே சிந்தை சிதருமலே
அந்தரங்கமாக நினைப்பாயே.

2. உலக சிநேகம் ஒரு நிமிஷமே
பாவ சிநேகம் பறந்து போமே
தேவனைச் சிநேகித்தால்—தியங்க வேண்டாம் நீயே
ஆவலாய் அவரை நினைப்பாயே.

3. பாவத்தை நீயும் பற்றற ஒழித்தே
சாபத்தை நீயும் தகர்த்தெறிவாயே
ஆபத்தான அப்பாதை தேவகோபம் வருமே
சாபத்தை நீக்க வந்த யேசுவை நேசி.

4. சிம்சோனைப் போல் சிநேகம் கொள்ளாதே
அம்சமெல்லாம் அழிந்து போகுமே
நசரேயனுன சிம்சோன் நாசமானுனே அன்று
பெலிஸ்தரினுல் கொல்ல ஏதுவானுனே

5. மனக் கடினத்தினுல் மாகேடு வருமே
மனப் பாரத்தினுல் மா தொல்லை நேருமே
மனப் பாரமெல்லாம் நீங்க மா சந்தோஷம் பொங்க
மாசில்லாத யேசுவை நேசி நீயே.

71

இயேசுவே எந்தன் இதயத்தின் ராஜா
என்னை ஆளும் நல்லரசே — வல்ல
என்னை ஆளும் நல்லரசே
உம்மைப் போல ஒரு தேவனை உலகினில்
கண்டிலேன்
உம்மையேதான் நான் நம்பினேன் — நாதா
— இயேசுவே

சரணங்கள்

1. பாவத்தில் பாவி பயங் கரபாவி
பரனே நான் மா பாவி — ஆனேன்
திரண்ட அன்பை ருசித்து இரண்டாந்தரமாய்
அறைந்திட்டேன் சிலுவையிலே — உம்மை
— இயேசுவே

2. கொடும் பாவி யானும் இடும் கண்ணீர் கண்டு
விடும் விடுதலையாகி — என்னைத்
தொடும் அக்கினியால் அடும் எரியும் என்
பாவங்களை
கடுங்காவலாய்க் காருமேன் — என்னை — இயேசுவே

3. பாதம் பணிந்தேன் மன்ருடி நின்றேன்
பாவமதை மன்னித்தீர் — எந்தன்
உம் இரத்தம் அல்லால் என்னைச் சுத்தம் செய்யவே
உலகினில் ஏதுமில்லையே — எனக்கு — இயேசுவே

4. நம்பி வந்தோரைத் தள்ளிடேன் என்ற
தம்பிரா தஞ்சம் வந்தேன் நின்னிடம்
வாக்குத்தத்தங்களை ஆக்கியோன் நீரே
வாக்கு மாருதவரே — என்றென்றும் — இயேசுவே

5. திலகமே எந்தன் பலவீனம் முற்றும்
நலமாய் அறிந்தவரே — என்னை
வல்லகரம் பிடித்தென்னையும் நலமான வழியில்
விலகாமல் என்னைக் காருமே — என்னையும்
— இயேசுவே

6. விட மாட்டேன் நாதா! விடமாட்டேன் நாதா
விட மாட்டேன் நின்பாதம்—என்றென்றும்
உம்மை விட்டிடில் யார் என்னை சேர்த்திட
நான்தான்
பாதமதை அண்டினேன்—உந்தன் —இயேசுவே

72

நிலையில்லா உலகத்தில் அலைந்தேனையா
நினைத்தென்னை அழைத்தீரே எனதேசையா.

சரணங்கள்

1. மறந்தும்மை மறுதலித் தடங்காமலே
மனம் போன வழிகளில் நடந்தேனையா
மடிந்திடும் என்னைக் கண்டு விரைந்தென்னருகில்
வந்து
மனதுருகினீரே ஐயா—என்மேல்

2. சிறந்த உம் முகம் காண விரைந்தாசித்தேன்
சிலுவையின் தரிசனம் அளித்தீரையா
இனிய உம் சத்தம் கேட்டேன் கொடிய என் குணம்
[விட்டேன்
இனிமேல் என் துணை நீரையா —பூவில்

3. உமக்காக என்னையும் நீர் தெரிந்தெடுத்தீர்
உமதாவி என்னிலீந்து பெலனளித்தீர்
உம்மையன்றிப் பூவில் வேறு அடைக்கலம்
எனக்கில்லை
உம்மை நம்பி ஜீவிப் பேனையா —இனி

4. அதிசீக்கிரமாய் நீங்கும் உபத்திரவம்
அதிக நித்திய கனமகிமை தரும்
பலவித இன்னல் கண்டும் சில வேளை சிட்சை
வந்தும்
பதறுமல் பொறுப் பேனையா —இன்னும்

5. உடுக்க உடையும் உண்ண உணவும் தந்தீர்
இடுக்கமான உம் பாதை எனக்களித்தீர்
விசுவாசப் பிரயாணத்தைத் துடங்கின தினமுதல்
விசுவாசம் பெருகுதையா —என்னில்

6. இருண்ட கெத்சே மனேயில் ஒளி தோன்றுதே
இனிய இயேசையா உந்தன் திருமுகமோ
எனக்குந்தான் அனுபவம் அளித்திடத் திரும்பவும்
தினம் ஜெபம் செய்கின்றேனையா —தேவா

7. எனது மரணமோ உம் வருகை நாளோ
எது முன்பு என்னை வந்து அழைத்திடுமோ
கடைசி முடிவு நாளில் மறவாதீர் என்னை நாதா
கனிவாய் வேண்டுகின் றேனையா —இப்போ.

73

அவரைப் பின் செல்வாயா ?

1. சுபசெய்தி நீ இன்று கேட்டாய்
சுதன் இயேசு ரட்சகரால்
அழைப்புக்குக் கீழ்ப்படி வாயா,
அவரைப் பின் செல்வாயா ?

பல்லவி

நம்பி வா நீ நம்பி வா நீ
தம்பிரான் இயேசுவைப் பார் நீ } (2 முறை)

2. மழைக் காலம் அநேகம் கடந்தாய்
மெய்யான அறுப்பினேயும் கண்டாய்
இதமாம் குளிர், கோடையும் கண்டாய்
இன்னும் பாவத்தில் இருக்கிருய் ! —(நம்பி வா நீ)

3. உன் முடிவை யறிந்திட வென்றே
உம்பன் காத்திருப்பார் உனக்கென்றே
அன்னை போல் உன்னை ஆதரித்தாளும்
அன்பராம் அவர் அடைக்கலம் —(நம்பி வா நீ)

74

வருவாய் தருணமிதுவே அழைக்கிருரே
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை

சரணங்கள்

1. வாழ்நாளையெல்லாம் வீண் நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக் கொள்வார்
—வருவாய்

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்ருர் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனுல்
கூட உன்னேடு வருவதில்லை —வருவாய்

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர் நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை —வருவாய்

4. வானத்தின் கீழே, பூமி மேலே
வானவர் இயேசு நாமம் அல்லால்
இரட்சிப்படைய வழியில்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே —வருவாய்

5. தீராத பாவம் வியாதியையும்
மாருத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய —வருவாய்

6. சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன் பேரை ஜீவ புத்தகத்தில்
உண்மையாய் இன்று எழுதிடுவார் —வருவாய்

75

நம்பியே வா நல் வேளையிதே உன்
நேசர் இயேசுவையே நம்பிடுவாய்

சரணங்கள்

1. கர்த்தரிடம் விசுவாசமே
கடுகளவு உனக்கிருந்தால்
கதறிடும் உன்னைக் காத்திடுவார்
கலங்கிடாமல் நீ நம்பிடுவாய் — நம்பியே

2. திக்கற்றோரின் தகப்பனவர்
தவிக்கும் விதவையின் தேவன் அவர்
அமைதியிழந்து கண்ணீரோடே
அலைந்திடாமல் நீ நம்பியே வா — நம்பியே

3. கர்த்தரின் கைகுறுகவில்லை
கர்த்தரின் செவிமந்தமாகவில்லை
தேவனின் முன்னே உன் வினைகள்
தடுத்து ஜெபத்தைத் தள்ளிடுதே — நம்பியே

4. பாவங்களை மன்னித்திடும்
பரலோக அதிகாரமுள்ள
இயேசு கிறிஸ்து முன்னிலையில்
இன்றுன் ளைத்தாழ்த்தி நம்பிடுவாய் — நம்பியே

5. சூரியனின் கீழ் உள்ளவை
சகலமும் வெறும் மாயையல்லோ
மானிடர் என்றும் மாறிடுவார்
மாறாத இயேசுவை நம்பிடுவாய் — நம்பியே

76

அழைக்கிறார் அழைக்கிறார்
அன்பாய் இன்றே உன்னை
கல்லும் கரையும் கல்வாரியண்டை
கர்த்தர் அழைக்கிறார்

சரணங்கள்

1. கேட்டின் மகன் கெட்டழிந்தான்
கெட்ட குமாரனைப் பார்
பாவத்தின் சம்பளம் மரணமே
பாவத்தில் மாளாதே —அழைக்.

2. உந்தன் நீதி கந்தையாகும்
உன்னில் நன்மை ஒன்றில்லை
பாவம் செய்தே மகிமையிழந்தாய்
பாவியை நேசித்தார் —அழைக்.

3. பாவங்களை மறைப்பவன்
பாரில் வாழ்வை அடையான்
சன்மார்க்கன் துன்மார்க்கன் இருவரும்
சங்காரம் அடைவார் —அழைக்.

4. நானே வழி சத்தியமும்
நித்தியஜீவன் என்றார்
இயேசுவை நம்பி நீ ஜெபிப்பதால்
இரட்சண்யம் அடைவாய் —அழைக்.

5. காலங்களும் கடந்திடும்
வால வயதும் மாறும்
தேவனைச் சந்திக்கும் வேளையிதே
தேடி நீ வாராயோ —அழைக்.

77

ஓ — மாளுதே என் கரத்தின் கிரியைகளே என் ஜனமே
மாண்டு போகுதே – என்றேசு வேண்டுகின்றார்.

சரணங்கள்

1. சமாதானமே இழந்தேங்கும்
ஜனமே உன் பாரம் என்ன
இதயம் திறந்துரைப்பாயோ
இன்ப இயேசு உன்னை — இன்று ஏற்றுக்
கொள்வார் — மாண்டு

2. வஞ்சனை நிறைந்த இப்பாரில்
தஞ்சம் எங்கு தேடுகின்றாய்
அலைந்து திரிந்தழிவாயோ
அமர்ந்து உணர்ந்து சிலுவை நோக்கிப்பார்
— மாண்டு

3. வறண்ட வனாந்திர வழியே
வணங்காக் கழுத்துடனே
முரட்டாட்டமான ஜனங்கள்
முறிந்தே விழுந்தே மடிந்தார் — அதைப்பார்
— மாண்டு

4. இரக்கம் கிருபையும் தயவும்
உருக்கம் பொறுமையுடன்
உனக்காகக் காத்திருந்தாரே
உனக்கேன் இன்னும் தாமதம் வந்திடாயோ
— மாண்டு

5. நித்ய ஜீவ பாதையோ இடுக்கம்
நீதிமான் அதில் நடப்பான்
அழிவின் வழியோ விசாலம்
அதிலே நடப்போர் — நரகம் அடைவார்
— மாண்டு

6. தேவ கோப ஆக்கினை இறங்கும்
பாவ சோதோமும் அழியும்
வேத வாக்கியம் நிறைவேறும்
பூதலம் வெந்தழிந்திடும் காலமிதே — மாண்டு

78

மோசம் போகாதே நண்பனே — ஏசுவண்டைவா!
மனுஷன் எதை விதைப்பானோ அதை அறுப்பானே

சரணங்கள்

1. மாம்சத்திற்காய் விதைத்திட்டால் அழிவை
அறுப்பாய்
ஆவிக்கென்று விதைத்திட்டால் ஜீவனை அறுப்பாய்
— மோசம்

2. மனுஷன் பேசும் வீண் பேச்சு ஒவ்வொன்றுக்கு மவன்
கணக்கொப்புவிக்க வேண்டுமே நியாயத் தீர்ப்பிலே
— மோசம்

3. இருளில் மறைந்திருப்பவை வெளியரங்கமாகும்
இருதயத்தின் யோசனைகள் வெளிப்பட்டிடுமே
— மோசம்

4. வெளிக்கு வரா மறைபொருள் ஒன்றுமில்லையே
அறியப்படா இரகசியமும் இல்லை அறிவாயே
— மோசம்

5. வானம் உந்தன் அக்ரமத்தை வெளிப்படுத்தும்
பூமியுனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லிடும்
— மோசம்

6. சிலருடைய பாவம் முந்தும் நியாயத் தீர்ப்புக்கு
சிலர் பாவம் பின்தொடருமே கடைசிவரைக்குமே
— மோசம்

7. நியாயத் தீர்ப்பில் தப்பிட நீ ஏசுவண்டை வா
இன்றே உந்தன் பாவம் நீங்கி மன்னிப்படைய வா
— மோசம்

79

என் தேவனே என் அன்பனே
வந்திடுவீர் வல்லமையாய்

அனுபல்லவி

ஆசீர்வாத நிறைவுடன் அன்பே
என்மேல் வந்திடுவீர்

சரணங்கள்

1. இரண்டோ மூன்றோ பேர்கள் எங்கே
உண்டோ அங்கே நானிருப்பேன்
என்றுரைத்த வாக்கின்படி
இன்றும் எம்மைச் சந்தித்திடும் —என்

2. கல்வாரியில் ஜீவன் தந்த
எங்கள் தேவா இயேசு நாதா
எங்கள் உள்ளம் உந்தன் அன்பால்
நிறைந்தும்மைத் துதித்திட —என்

3. அந்தோ ஜனம் பாவங்களால்
நொந்து மனம் வாடுதையோ
இன்ப முகம் கண்டால் போதும்
இருள் நீங்கி ஒளி காண்பார் —என்

4. ஆதி அன்பால் தேவஜனம்
தாவி மனம் மகிழ்ந்திட
ஆவி ஆத்மா சரீரமும்
பரிசுத்தம் அடைந்திட —என்

5. ஆவலுடன் உம் வரவை
எதிர் நோக்கிக் காத்திருக்க
ஆவி வரம் யாவும் பெற்று
நிறைவுடன் இலங்கிட —என்

80

1. பாவியே ஜீவ ஊற்றண்டை வா
மேவியே ஜீவனடைவாய் ;
கூவியே இயேசு கூப்பிடுகிருர்
தாவியே ஓடி நீ வா

பல்லவி

தாமதமே செய்திடாதே
தருணமே இதை விடாதே
தற்பரர் இயேசு உன்னை இரட்சிப்பார்
பொற்பாதம் ஓடியே வா

2. உள்ள நிலைமையுடனேடி வா
கள்ளவுலகை விட்டு :
தள்ளமாட்டாரே எப்பாவியையும்
வல்ல இயேசு நாதரே —தாமதமே

3. வந்து நீ சொஸ்தமடைந்து கொள்
ஐந்து காயத்தழும் பால்
நொந்தவன் சொந்தமாய் வரும்போது
ஈந்தவர் அனுப்புவார் —தாமதமே

4. பாவியொருவன் திரும்புகையில்
கண்டவர் ஆண்டவர்முன்
காவியங்கள் கொண்ட பாடல்களை
கூவியே பாடிடுவார் —தாமதமே

5. வாக்குத்தத்தம் தந்த வல்லவரும்
வாக்குத் தவருதவர்
போக்குச் சொல்லுகிறவர்களையே
தாக்குமிடம் வைத்துள்ளார் —தாமதமே

6. உண்மையாய் இயேசுவை ஏற்பவரை
வெண்மையாக மாற்றுவார்
நன்மையே நாடெங்கும் செய்திட்டவர்
உன்னையும் அழைக்கிருர் —தாமதமே

7. அல்லேலூயா கீதம் பாடிடுவாய்
வல்ல ஆவியைப் பெற்று
நல்ல நாதர் இயேசுவை நாடினுல்
எல்லா ஈவுகளும் கிட்டும் —தாமதமே

81

என் மீட்பர் சென்ற பாதையில் செல்ல நீ ஆயத்தமா
கொல்கதா மலை வாதையில் பங்கைப் பெறுவாயா?

பல்லவி

சிலுவையை நான் விடேன்
சிலுவையை — சிலுவையை நான் விடேன்

2. ஊரார் இனத்தார் மத்தியில் துன்பம் சகிப்பாயா
மூர்க்கர் கோபிகள் நடுவில் திடனாய் நிற்பாயா?

3. தாகத்தாலும் பசியாலும் தோய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும் சிலுவை சுமப்பாயா?

4. பாவாத் மாக்கள் குணப்பட நீதத்தம் செய்வாயா
கோழை நெஞ்சர் திடப்படமெய் யுத்தம்
செய்வாயா ?

5. லோகத்தார் மாண்டு போகிறுர் மெய்வீரர்
இல்லாமல்
பார் மீட்பர் ஜீவனை விட்டார் தொங்கிச் சிலுவையில்

6. வாழ் நாளெல்லாம் நிலே நின்று சிலுவை சுமப்பேன்
தேவ அருளினுல் வென்று மேல் வீட்டைச்
சேருவேன்

82

மகனே ஓ மகனே உன் இதயத்தைத் தாராயோ
இப்போ தாராயோ இப்போ தாராயோ

சரணங்கள்

1. கெட்ட மகனைப் போலத் துட்ட வழிகளிலே
மட்டு மிஞ்சி நீஅலேந்தாய்—உன்னைக்
கட்டிப் பிடித்து முத்தமிட்டே அரவணைப்பேன்
திட்டம் இது நீ ஓடி வா —மகனே

2. அஞ்சா மனதுடனே பஞ்சமா பாதகங்கள்
மிஞ்சவுமே புரிந்தாய்—என்
நெஞ்சம் உருகுதப்பா பஞ்சக் காயங்களிலே
தஞ்சம் தருவேன் வாராயோ —மகனே

3. அங்கரங்கள் துளேக்க செங்குருதி சுரக்க
தொங்கிக் குருசில் மரித்தேன்—உன்
பங்கம் அனைத்தும் போக்கித் தங்க அரண்மனையில்
சிங்காசனத்தில் அமர்த்த —மகனே

4. கையில் உனை எடுத்து மெய்யாய் அரவணைத்துக்
கண்ணீர்கள் யாவும் துடைப்பேன்—நீ
செய்யும் ஜெபங்கள் கேட்டுப்பெய்வேன்
ஆசீர்வாதங்கள்
நையாது காத்திடுவேன் —மகனே

5. நித்திய ராஜ்ஜியத்தில் நித்திய ஜீவனோடு
நித்திய காலம் வாழலாம்—பரி
சுத்த உலக மதில் அத்தன் மணவாளனுடன்
நித்தம் களித்திடலாம் வா —மகனே

83

என்னையும் உமக்கு நான் தந்தேனே இயேசு நாதா
என் கரம் பிடித்தென்றும் நடத்திடும்

அ. பல்லவி

என் சித்தம் என்னில் ஒன்றும் நிறைவேற விரும்
பேனே
உம் சித்தம் போல என்னை நடத்திடும் பரமேசா
—என்னை

சரணங்கள்

1. பாதையில் பாடுகள் பெருகியே வந்தாலும்
வாதை பிணியும் என்னை வருத்தினாலும்
வல்லமை குன்றிடாமல் வழிகள் மேல் ஆர்த்துமே
வழுவாமல் அனுதினம் நடத்திடும் பரமேசா
—என்னை

2. கொந்தளிப்பால் அலைமோதிடும் படகு போல்
எந்தன் ஜீவிய யாத்திரை நடந்தாலுமே
சோதனை வெள்ளம் போல புரண்டென் மேல்
வந்தாலும்
சோர்ந்திடா தயையுடன் நடத்திடும் பரமேசா
—என்னை

3. அக்கினி ஊடாக நடந்து நான் சென்றாலும்
அக்கினி பற்றிடா தென்றுரை செய்தீரே
தண்ணீரைக் கடந்து நான் நடந்திடும் வேளையும்
தவறாமல் துணை நின்று நடத்திடும் பரமேசா
—என்னை

4. ஏழை என் வாலிபத்தின் அதிபதி நீரல்லவோ
என் மணவாளனும் நீர் தானல்லவோ
ஜீவனுள்ள நாளெல்லாம் நீர் போதும் இயேசுவே
ஜீவனும் போகும் வரை நடத்திடும் பரமேசா
— என்னை

5. இத்தரை யாத்திரை விரைந்தோடி முடிந்த பின்
அக்கரை நாட்டினைச் சுதந்தரிப்பேன்
இயேசுவே கண்ணீர் யாவும் துடைத்தென்னைத்
தேற்றுமே
என்றுமாய் ஜெயக்கீதம் பாடுவேன் பரமேசா
— என்னை

84

தேவசித்தம் நிறைவேற என்னையும் ஒப்படைக்
கிறேன்
தேவசித்தம் என்னுள்ளே பலமாகத் தொனிக்குதே

சரணங்கள்

1. முட்களுக்குள் மலர்கின்றதோர்
மக்களைக் கவரும் லீலி புஷ்பம் போல்
என்னையுமே தம் சாயலாய்
என் றென்றும் உருவாக்குவார் — தேவசித்தம்

2. பொன்னைப் போலப் புடமிட்டாலும்
பொன்னாக விளங்குவே னென்றுமே
திராணிக்கு மேல் சோதித்திடார்
தாங்கிட பெலனளிப்பார் — தேவசித்தம்

3. அத்திமரம் துளிர் விடாமல்
ஆஸ்திகள் அழிந்து நஷ்டம் வந்தாலும்
கர்த்தருக்குள் சந்தோஷமாய்
நித்தமும் மகிழ்ந்திருப்பேன் — தேவசித்தம்

4. நீதிமானே அனுதினமும்
சோதிக்கப் பல்வேறு துன்பம் வந்தும்
கர்த்தர் அன்பை விட்டு நீங்கா
சுத்தனாய் நிலைத்திருப்பேன் — தேவசித்தம்

5. முன்னறிந்து அழைத்தவரே
முன்னின்று நலமுடன் நடத்துவார்
சகலமும் நன்மைக்கென்றே
சாட்சியாய் முடித்திடுவார் — தேவசித்தம்

6. சோதனையைச் சகிப்பவனே
சாந்தமும் பொறுமையுமுள்ளவனே
ஜீவக்கிரீடம் பெற்றிடுவான்
ஜோதியாய்ப் பிரகாசிப்பான் — தேவசித்தம்

7. கஷ்டமெல்லாம் தொலையும் ஓர்நாள்
கண்ணீரும் கவலையும் நீங்கும் அந்நாள்
இரட்டிப்பான பங்கைப்பெற்ற
இரட்சகர் அழைத்திடுவார் — தேவசித்தம்

85

உறக்கம் தெளிவோம்
உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதிவரை
கல்வாரித் தொனிதான்
மழை மாரி பொழியும்
நாள் வரை உழைத்திடுவோம்.

சரணங்கள்

1. அசத்தும் களைவோம்
அன்பை அழைப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம்
அவர் பணி செழிக்க
நம்பினை கருத்து
வெற்றியை மின்றி வாழ்வோம் — உறக்கம்

2. அச்சம் தவிர்ப்போம்
தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சி கூறும்
இரத்தச் சாட்சிகள்
நம்மிடைத் தோன்றி
நாதனுக்காய் மடிவோம் — உறக்கம்

3. கிறிஸ்துவுக்காய்
இழந்தவர் எவரும்
தரித்தவர் ஆனதில்லை
இராஜ்ய மேன்மைக்காய்
கஷ்டம் அடைந்தோர்
நஷ்டப் பட்டதில்லை — உறக்கம்

4. உயிர் பெறுவீர்
ஒன்று கூடுவீர்
உலர்ந்த எலும்புகளே
நீங்கள் அறியா
ஒருவர் உங்கள்
நடுவில் வந்து விட்டார் — உறக்கம்

86

1. காலம் கடந்திடும் முன்னர்
கருத்துக் கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம்
எடுத்துச் செல்லச் சேருமே!
சுத்தக் கரத்தை உயர்த்தி
பரிசுத்தர் யாரும் சேருமே
பாவத்தில் சாகும் ஜனத்தை
தடுத்து நிறுத்தக் கூடுமே — இன்றே

பல்லவி

காலம் கடந்திடும் முன்னர்
கருத்துக் கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம்
எடுத்துச் செல்லச் சேருமே

2. தன் கடன் செய்யா மனிதன்
கவலையில் வாடி நிற்பான்
தீபத்தில் எண்ணெய் பெருதோர்
துக்கத்தில் மூழ்கிடுவார்
ஆத்தும ஆதாயம் செய்யார்
சிரசினில் அடித்துக் கொள்வார்
மாய்மாலம் புரிந்தோர்க்கு
செம்மையாய்ப் பதில் கொடுப்பார் — இன்றே

3. சீஷர்கள் யாவரும் ஒன்ருய்
ஜோதியாய்த் திகழ்ந்திடுவார்
இரத்தச் சாட்சிகளின் கூட்டம்
வெற்றி முழக்கம் செய்யும்
ஜெபித்தோர் சிரத்தை எடுத்தார்
ஆனந்தப் பாடல் செய்குவார்
இராஜாதி இராஜன் இயேசுவே
நீதியாய் அரசாளுவார். — இன்றே

4. நீ வாழும் இப்பூமி நாசம்
ஆகும் காலம் வருதே
உலகின் கடைசிச் சந்ததி
நீயாக இருக்கலாமே!
எழும்பு!, எழும்பு தெபோராள்
பாராக்கே, விழித்து விடு
தேவைக்கு ஏற்ற பெலனை
இன்றைக்கே பெற்றெழும்பு! — இன்றே

87

1. கர்த்தரிலும் அவர் வல்லமையிலும்
கிருபையாய் யாவரும் பலப்படுவோம்
தீங்கு நாளிலே சாத்தானை எதிர்த்து நின்று
திராணியுடன் போர் புரிவோம்

பல்லவி

சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொள்வோம்
சாத்தானின் சேனை முறித்திடுவோம் — அவர்
சத்துவ வல்லமையால்

2. மாமிசம் இரத்தத்துடனுமல்ல
துரைத்தனம் அதிகாரம், அந்தகாரத்தின்
லோகாதிபதியோடும் பொல்லா ஆவியோடும்
போராட்டம் நமக்கு உண்டு —சர்வாயுத

3. சத்தியமாம் கச்சையைக் கட்டியே
நீதியின் மார்க்கவசம் தரித்தே
சமாதானத்தின் சுவிசேஷப் பாதரட்சை
நாம் கால்களில் தொடுத்துக் கொள்வோம்
—சர்வாயுத

4. பொல்லாங்கனெய்யும் அம்புகளை
வல்லமையோ டெதிர்க்கும் ஆயுதம்
விசுவாசமென்னும் கேடகம் மேலே
வீரமுடன் பிடித்து நிற்போம் —சர்வாயுத

5. இரட்சண்யமாம் தலைசீராவும்
எக்ஷணமும் அணிந்துக் கொள்வோம்
தேவ வசன மென்னும் ஆவியின் பட்டயம்
தேவை அதைப் பிடித்துக் கொள்வோம் —சர்வாயுத

6. எந்தச் சமயத்திலும் சகல
வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்
பரிசுத்தர்கட்காகவே ஆவியினால்
மன உறுதியுடன் ஜெபிப்போம் — சர்வாயுத

88

வாசலண்டை நின்று ஆசையாய்த் தட்டும்
நேசர் இயேசுவுக்குன்னுள்ளம் திறவாயோ

அநுபல்லவி

பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே —வாசலண்டை

சரணங்கள்

1. ஆதரிப்பார் யாருமில்லை யென்றெண்ணி
ஆதரை யீதினில் அலைந்திடுவாயோ
காணாத ஆட்டைத் தேடி வந்த மேய்பர்
கண்டுன்னை மந்தையில் சேர்த்திடுவார்
—வாசலண்டை

2. அற்பவாழ்வை நித்ய வாழ்வு என்றெண்ணி
தற்பரன் தயவை தள்ளிடலாமோ
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய் —வாசலண்டை

3. பாவத்திலுல் சாப ரோகத்தால் தொய்ந்து
மாயையில் ஆழ்ந்து மடிந்திடுவானேன்
பாவத்தைப் போக்கிடும் தூய உதிரத்தின்
ஜீவ ஊற்றில் மூழ்கி மீட்புற வா
—வாசலண்டை

4. மனம் மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் இராஜ்யம் காணக்கூடுமோ
பிறந்தாலோ ஜலத்தாலும் ஆவியாலும் மெய்யால்
பிரவேசிப்பாய் தேவ இராஜ்ஜியத்தில்
—வாசலண்டை

5. வழியும் சத்யமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பரும் நாதனும் இயேசு
இயேசுவல்லால் வேறு இரட்சிப்பு இல்லையே
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ
—வாசலண்டை

89

மோட்ச வீட்டை நான் என்று சேர்வேன்
தூய தூய தேவா

பல்லவி

அல்லேலூயா தொனி கேட்குதே
அங்கே சென்று நானும் பாடுவேன்

சரணங்கள்

1. பொற்கள வீதியில் உலாவுவேன்
பொன் மாளிகையில் நான் தங்கிடுவேன்
முள் முடி சூடின ஏசுவை
பொன் முடி சூட்டி நான் போற்றிடுவேன்
— அல்லே

2. கண்ணீர்கள் யாவும் கர்த்தர் தாமே
கனிவுடன் கரத்தால் துடைப்பாரே
நல்ல போராட்டம் என் ஓட்டமும்
நலமுடன் ஓடி முடித்திடுவேன் — அல்லே

3. புதிய எருசலேம் வாசல்கள்
பூரிப்புடன் என்னை அழைக்குதே
எண்ணில்லா பக்தர்கள் தூதர்கள்
என்னரும் ஏசுவையும் காணுவேன் — அல்லே

4. கல்லறைத் தோட்டம் அங்கே இல்லை
குறுகின ஆயுசுள்ளோர் அங்கில்லை
சாவு பவனி அங்கே இல்லை
சஞ்சலம் பஞ்சமும் அங்கே இல்லை — அல்லே

5. புவி யாத்திரை முடியும் போது
பரதீசியில் சென்றிளைப்பாறுவேன்
எக்காளம் தொனிக்கும் நேரத்தில்
எழும்பி என் பங்கை நான் பெற்றிடுவேன்
— அல்லே

90

1. மோட்சயாத்திரை செல்கிறோம் மேலோக வாசிகள் — இம்
மாயலோகந்தாண்டியே எம் வீடு தோன்றுதே
கடந்து செல்கிறோம் கரையின் ஓரமே
காத்திருந்த ராஜ்ஜியம் கண்டடைவோம்

பல்லவி

ஆனந்தமே ஆ! ஆனந்தமே
ஆண்டவருடன் நாம் என்றும் வாழ்வோம்
ஆதி முதற் பிதாக்களோடு தூதருமாய்
ஆர்ப்பரிப்புடன் கூடி வாழ்வோம்

2. சத்திய சுவிசேஷம் எடுத்துரைத்துமே — தம்
நித்த ராஜ்ய மக்களை ஆயத்தமாக்கவே
தேசமெங்கும் அலைந்து செல்கிறோம்
நேசர் ஏசு வாக்குரைகள் நம்பியே
— ஆனந்தமே ஆ

3. அள்ளித்தூவிடும் விதை சுமந்து செல்கின்றோம்
அண்ணல் ஏசுவின் சமுகம் முன்னே செல்லுதே
கண்ணீர் யாவுமே கடைசி நாளிலே
கர்த்தரே துடைத்து எம்மைத் தேற்றுவார்
— ஆனந்தமே ஆ

4. மேகஸ்தம்பம் அக்கினி வெளிச்சம் காட்டியே
ஏகமாய் வனாந்திர வழி நடத்துவார்
இலக்கை நோக்கியே தவறிடாமலே
இப்புவி கடந்து அக்கரை சேர்வோம்
— ஆனந்தமே ஆ

5. கர்த்தர் எம் அடைக்கலம் கவலையில்லையே — இத்
துன்பம் நேரமோ கலக்கமில்லையே
கஷ்டம் நீக்குவார் கவலை நீக்குவார்
கைவிடாமல் நித்தமும் நடத்துவார்
— ஆனந்தமே ஆ

6. ஆரவாரத்தோடெம்மை அழைத்துச் சென்றிட
— தம்
ஆவலோடு வானிலே தூதர்கள் சூழ்ந்திட
காக்க வல்லவர் நல் வாக்குரைத்தவர்
கனிவுடன் நம்மிடம் வருகிறார் — ஆனந்தமே ஆ

91

இன்பக் கானானைக்கண்டு நான் இன்பமாய்
வாழுவேன் அதிலே
அன்பர் யேசுவின் முகம் கண்டு மகிழ்வேன்

அனுபல்லவி

அங்கே ஆனந்த சங்கீதம் முழங்கி — நல்ல
பொங்கிடும் கீதங்கள் பாடி — இன்ப

சரணங்கள்

1. நல்ல பொன் வீதியில் நானும் உலாவி — அந்த
நன்மைகள் யாவையுங் கண்டு
மின்னும் கற்களும் பதித்தகைவேலையில்லா நல்ல
வீட்டில்
சென்று யுகாயுகமாயும் வாழ்வேன் — இன்ப

2. கோடா கோடியான தூதர் வசிக்கும் — அங்கு
கோடியாய்த் துதிகளும் பாடி
கோமான் யேசுவின் சமுகத்தில் அகமகிழ்ந்துமே
பாடி மகிழ்வேன்
அங்கு ஆனந்தம் பாடி நான் மகிழ்வேன் — இன்ப

3. அங்கு துன்பமும் துக்கமும் இல்லை — நல்ல
பங்குகளும் அங்கு உண்டு
யூதா சிங்கமே அங்குதான் ஜொலிப்பதால்
மின்னுமே ஒளியும்
நல்ல ஒளியுள்ள சந்தோஷ நாடே — இன்ப

4. சிங்காசனமும் அங்கு உண்டு — நல்ல
கிரீடமும் அங்கு தான் உண்டு
கிறிஸ்தேசுவில் நான் அங்கே கீதங்கள் பாடியே
என்றும்
கிறிஸ்தேசுவோடு கூட இருப்பேன் — இன்ப

92

ஆனந்தமாய் இன்பக்கானான் ஏகிடுவேன்
தூயப்பிதாவின் முகம் தரிசிப்பேன்

அநுபல்லவி

நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத்
தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார்

சரணங்கள்

1. சேற்றினின் றென்னைத் தூக்கியெடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன்
— ஆனந்தமாய்

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத் தேடிவந்தார்
எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன்
— ஆனந்தமாய்

3. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன்
இயேசு அல்லால் ஆசை இப்பூவினில் வேறே
இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே
— ஆனந்தமாய்

4. உம்மைப் பின் சென்று ஊழியம் செய்து
உம் பாதம் சேர்ந்திட வாஞ்சிக்கின்றேன்
தாரும் தேவா ஏழைக்கும் மாருதஉம்கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை
— ஆனந்தமாய்

5. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுதே உந்தன் சமூகமே
பெலத்தின் மேல் பெலனடைந்துநான் சேருவேன்
பேரின்ப சீயோனில் வாழ்ந்திடுவேன்
— ஆனந்தமாய்

93

அதிசயமான ஒளிமய நாடாம்
நேசரின் நாடாம்—நான்
வாஞ்சிக்கும் நாடாம்—என்

சரணங்கள்

1. பாவம் இல்லாத நாடு
ஒரு சாபமும் காணு நாடு (2)
நித்திய மகிழ்ச்சி ஓயா கீதம்
உன்னதத்தில் ஓசன்னு அல்லேலூயா —அதிசய

2. சந்திர சூரியன் இல்லை
ஆனால் இருள் ஏதும் காணவில்லை
தேவகுமாரன் ஜோதியில் ஜோதி
நித்திய வெளிச்சமாவார்—என்றும் பகல் —அதிசய

3. வித விதக் கொள்கை இல்லை
பலப் பிரிவுள்ள பலகை இல்லை (2)
ஒரே ஒரு குடும்பம், ஒரே ஒரு தலைவர்
எங்குமே அன்பு மயம்—அன்புள்ளோர் செல்லும்
—அதிசய

4. பிரச்சனை ஏதும் இல்லை
வீண் குழப்பங்கள் ஒன்றும் இல்லை (2)
மொழி, நிறம், ஜாதி பற்று உடையோர்
எவருமே அங்கு இல்லை—அன்பே மொழி
—அதிசய

5. பல பல திட்டங்கள் இல்லை
ஆளும் சட்டங்கள் ஏதும் இல்லை (2)
காவல் துறையில்லை கண்டிப்பும் இல்லை
மனிதனின் ஆட்சி இல்லை—பேரானந்தமே
—அதிசய

6. கடைத்தெரு ஏதும் இல்லை
தொழிற் சாலைகள் ஒன்றும் இல்லை (2)
தரித்திரர் செல்வர், சிறியவர் பெரியோர்
ஆகிய சிறப்பும் இல்லை—எல்லாம் சமம் —அதிசய

7. இயேசுவின் இரத்தத்தினால்
பாவம் கழுவினால் செல்லலாமே (2)
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர்
இப்பூமியில் எவரும் வேண்டாம்—இன்றே வாரீர்
—அதிசய

94

1. பூரண வடிவுள்ள சீயோனிலே
பாரினில் ஜெயங்கொண்ட பரிசுத்தரே
ஆர்ப்பரிப்போடு கீதங்கள் பாட
ஆனந்தம் பொங்கிடுமே.

பல்லவி

சீயோன் சீயோன் சிகரம்
சீயோன் தூய்மையின் சிகரம்
எருசலேம் பரம நகரம்
ஏகுவோம் என்றென்றும் வாழவே.

2. தூயப் பிதாவின் தேச மதில்
நேயர்கள் அவர் முகம் கண்டிடுவார்
கண்ணீர்கள் யாவும் தேவனே துடைப்பார்
— சீயோன்

3. பளிங்கு நதியின் இரு கரைகளிலே
பன்னிரு கனிதரும் விருட்சம் உண்டே
பரமனின் அன்பால் நிறைந்தவர் பாடும்
பாட்டிற்கோர் இணையில்லையே —சீயோன்

4. கற்புள்ள கன்னிகை கறையற்றவள்
கருத்துடன் ஆட்டுக்குட்டியானவரை
மகிழ்வுடன் நித்தம் பின் சென்றதாலே
மகிபனோடாட்சி செய்வாள் —சீயோன்

5. நகரத்தின் மூலைக்கல் மகிபனேசு
நானில மெங்கும் அவர் ஒளி வீசுதே
சீயோனைப் பணித்து தேவாதி தேவன்
சீக்கிரம் வெளிப்படுவார் —சீயோன்

95

தேவ சாயல் ஆக மாறி
தேவனோடிருப்பேன் — நானும்

சரணங்கள்

1. அந்த நாளும் நெருங்கிடுதே
அதி விரைவாய் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் களைந்தே — உயர்
விண்ணவர் சாயல் அடைவேன் — தேவ

2. பூமியின் கூடாரம் என்றும்
பெலவீனமே அழிந்திடுமே
கைவேலையல்லாத பொன்வீடு
கண்டடைந்து வாழ்ந்திடுவேன் — தேவ

3. சோரும் உள்ளான மனிதன்
சோதனையில் பெலமடைய
ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன்
ஆண்டவர் என்னோடிருப்பார் — தேவ

4. ஆவியின் அச்சார மீந்தார்
ஆயத்தமாய் சேர்த்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு
சாவு எந்தன் ஆதாயமே — தேவ

5. காத்திருந்து ஜெபிப்பதினால்
கழுகு போலப் பறந்தெழும்பி
ஜீவ யாத்திரை ஓடி முடித்து
ஜீவக் கிரீடம் பெற்றிடுவேன் — தேவ

6. மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவரை
முகமுகமாய்த் தரிசித்திட
வாஞ்சையாய்த் தவிக்கும் எனதுள்ளம்
வாரும் என்று கூப்பிடுதே — தேவ

7. உன்னத சீயோன் மலைமேல்
என் அருமை இயேசுவுடன்
ஜெப வீட்டினிலே மகிழ்ந்தே நான்
ஜீவிப்பேனே நீடூழியாய் — தேவ

96

1. ஜீவனுள்ள தேவனை சேவிப்பார் யாருண்டோ?
ஜீவனை அவர்க்காயளிக்க இங்கு யாருண்டோ?
ஜீவனை இரசிப்பவன் இழந்து போவானே
ஜீவனை வெறுப்பவனே பெற்றுக் கொள்வானே
— நம்மிலே

2. மனிதர் இன்றும் உலகில் வாழ்ந்து வருவதெவ்வாறு?
ஜீவாதிபதி இயேசு தம் ஜீவன் கொடுத்ததால்!
திருச்சபையின் வளர்ச்சி ஓங்கச் செய்த தெவ்வாறு?
பரிசுத்தரின் பரிவாரம் ஜீவன் விட்டதால்!
— நம்மிலே

3. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ உயர்ந்த
தெவ்வாறு ?
இராஜாவின் உள்ளத்தில் மாற்றம்
வந்ததெவ்வாறு ?
ஜீவனைப் பணயம் வைத்துத் தீக்குள் சென்றதால்!
சிலையை வணங்கத் தயக்கமின்றி மறுத்து நின்ற
தால் — நம்மிலே

4. பரலோகத்தின் பாக்கியத்தை பெறுவோர் யாவரும்
உபத்திரவத்தின் குகைக்குள் நுழைந்து சென்று
திரும்பணும்
உலகத்தையும் மேன்மையையும் உதறித் தள்ளணும்
சிலுவையை மட்டும் எடுத்துச் சுகித்திருக்கணும்
— நம்மிலே

5. வெள்ளை அங்கி தரித்து நிற்கும் கூட்டம் யார் இவர்
இரத்தத்தில் தம் அங்கிகளை வெளுத்துத் தோய்த்
தவர்!
ஜீவனை வெறுத்து, சிலுவையை எடுத்து
வெற்றிக்கீதம் பாடும் கூட்டம் உலகில் உதிக்கட்டும்
— நம்மிலே

97

ஜீவியமே ஒரே ஜீவியமே
அண்ட சராசரம் அனைத்திலுமே
மேவி வசிக்கும் மனிதர் அனைத்தும்
பூமியில் வாழ்வது ஒரே தரமே — ஜீவியமே

சரணங்கள்

1. பிறப்பதும் இறப்பதும் தெய்வச் செயல்
இடையில் இருப்பது வாழ்க்கையாகும்
இயேசுவில் சார்வதால் பரிசுத்தம் காணும்
பரிசுத்தர் ஆட்சியில் கூறும்
இதை விடில் முடிவது வீழ்ச்சியாகும் — ஜீவியமே

2. நித்தம் நமைவிட்டுச் செல்வார் பாரீர்
அவர் யாரும் செல்லும் அவ்விடமும் பாரீர்
அலறலும் புலம்பலும் உடல்தனைக் கீறலும்
நரகத்தின் தினசரி காட்சி கேளீர்
இரக்கத்தின் வழி காணார் கதியும் காண்பீர்
— ஜீவியமே

3. திறப்பின் முகம் நிற்க ஆட்கள் தேவை
தியாகத்தின் பாதைக்குச் செல்வோர் தேவை
என் ஜனம் அழியுதே என ஏங்கும் ஆண்டவர்
துக்கத்தைத் தணிக்கும் சீஷர் தேவை
முன் வருவோர் யார்க்கும் இதுவே வேளை
— ஜீவியமே

4. எண்ணிப்பார் கழிந்திட்டக் காலமதை
கதையைப் போல் மனிதரின் நாட்கள் செல்லும்
உலகத்துச் சேவை சாகையில் ஓயும்
உன்னுடன் மரித்தபின் வருவதெது ?
கிறிஸ்துவின் சேவை நிலைத்து நிற்கும்
— ஜீவியமே

5. அர்ப்பணம் தந்தையே கையளித்தேன்
கல்வி, செல்வம், சுகம், பொருள் அனைத்தும்
சொல்லுவேன், சொல்லுவேன், 'இயேசுவே வழி'
என
வாழ்க்கையில் தம்மையே கொண்டு வாழ்வேன்
என்றுமே அங்கே நான் உம்மில் வாழ்வேன்

98

ராஜாதி ராஜாவே வாரும்
ராஜ்ஜியத்தை ஆளவே சேரும்
ராஜாதி ராஜா என்ற பேரும்
ராஜ மகிமை உம்மைச் சாரும்

அ. பல்லவி

ஓ! ஓ! ஓ! மேகவானத்தின் மேல் வாருமே
ஓ! ஓ! ஓ! பூலோகத்திலுள்ள எம்மைக் காருமே

சரணங்கள்

1. ஓ! ஓ! ஓ! பூதலத்தோர் யாவரும் நோக்கிட
ஓ! ஓ! ஓ! குத்தின யூதர் புலம்பிட
உம் ராஜ்ஜியத்தை ஸ்தாபித்திட
உள்ள பதரை ஒழித்திட
வானம் பூமியைப் போக்கிட
காணவுள்ள நாங்களும் சேர்ந்திட — ராஜாதி

2. ஓ! ஓ! ஓ! வானத்திலே தூதர் ஆர்ப்பரிக்க
ஓ! ஓ! ஓ! போன ஆத்துமாக்கள் எழு
உயிருள்ள சுத்தரை மேலெடுக்க
ஒன்றாய் உம்மை யாவரும் சந்திக்க
இயேசு ராஜா உம்மை யாம் பார்க்க
உள்ள எங்கள் ஏக்கத்தையும் நீக்க — ராஜாதி

3. ஓ! ஓ! ஓ! புதிய எருசலேம் சங்கமே
ஓ! ஓ! ஓ! கதிபெற வேயுள்ள சரீரமே
ஆட்டுக் குட்டியின் மனை வியாமே
பாட்டுக்களும் பாடிடுவோமே
நாட்டத்தோடு நாங்களுள் ளோமே
தேட்டமாக சீக்கிரம் வாருமே — ராஜாதி

99

பிரதான தூதன் எக்காளம் முழங்க
பரமன் இயேசு வருவார் — (2)

பல்லவி

சாயுங்காலத்திலோ நடுராவினிலோ
சேவல் கூவிடும் நேரத்திலோ
பரமன் இயேசு வருவார்

சரணங்கள்

1. இருவர் வயலில் இருப்பார்
இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைப்பார்
ஒருவர் கைவிடப்படுவார்
ஏற்றுக் கொள்ளப்படுவார் ஒருவர் — சாயுங்

2. நோவா காலத்தின் சம்பவம் போல்
நடந்திடும் அந்த நாட்களிலே
புசித்தும் குடித்தும் பெண் கொண்டும்
பலர் அசந்து வெறித்திருப்பார் — சாயுங்

3. லவுகீகக் கவலைகளினாலும்
இலச்சை மிகுந்த வெறியினாலும்
எம் இதயம் பாரம் அடையாமல்
எச்சரிக்கையுடன் காத்திருப்போம் — சாயுங்

4. இரவும் பகலும் விழிப்பாய்
இருதயம் நொறுங்கி ஜெபிப்போம்
கற்புள்ள கன்னிகையாக நாமும்
கர்த்தர் வருகைக்குக் காத்திருப்போம் — சாயுங்

5. தவிக்கும் உலகம் அந்த நாளில்
தலைகளை உயர்த்தி நடப்போம்
வருகை நெருங்க கர்த்தர் இயேசு
வாசற் படியில் வந்து நிற்கிறார் — சாயுங்

100

காண்பேன் எப்போது என் இயேசு நாதனை
மகிழ்வேன் அப்போது என் ஆசை காந்தனில்

சரணங்கள்

1. வேகம் வருவேன் என்று சொல்லிப் போனீரே
வேகம் வராமல் இன்னும் தாமதம் ஏனோ
வேகம் வந்து என் ஆவல் தீர்த்திடும்
வேகமாகவே மேகத்தில் தோன்றிடும்
— காண்பேன்

2. இப்பாழுலகத்தில் என் ஆசை ஒன்றுண்டோ
இப் பூவுலகத்தில் என் ஆசையில்லையே
மேலுலகமே என் சொந்த ஸ்தலமே
மேன்மையாகவே நான் கண்டு வசிப்பேன்
— காண்பேன்

3. துன்பம் அதிகமே இங்கு தொல்லை அதிகமே
கஷ்டம் அதிகமே இங்கு நஷ்டம் அதிகமே
துன்பம் தீருமே அங்கு தொல்லை மாறுமே
கஷ்டம் மாறுமே அங்கு நஷ்டம் தீருமே
— காண்பேன்

4. தாமதம் வேண்டாம் இனி தாமதம் வேண்டாம்
தாமதிப்பீரோ இன்னும் தாமதிப்பீரோ
தாராளமாய் ஏராளமாய்த் தூதருடனே
பொன்னு காந்தனே வேகமாக வாருமே
— காண்பேன்

பல்லவிகள்

1. அற்புதர் அல்லவோ அற்புதர் அல்லவோ
அற்புதர் அல்லவோ என் இயேசு
கண்டோம் கேள்விப் பட்டோம்
வேதத்தில் வாசிக்கின்றோம்
அற்புதர் அல்லவோ என் இயேசு

2. அன்பால் உள்ளம் பொங்குதே
இன்ப நாமம் இயேசுவே
நன்றியால் நிறையுதே

தூயன் தந்த கிருபைக்காய்
துதிக்க என்றால் கூடுமோ
தந்தேன் என்னைத் தாழ்த்தியே
உந்தன் சித்தம் செய்வேனே

குறையவில்லையே எண்ணெய்
இறையே உந்தன் தயவினால்
வெறுமையான பாத்திரம்
நிறையுமே உம் ஆவியால்

3. என் உள்ளம் தேவன் பால் பொங்கி வழியுதே
இயேசென்னை ரட்சித்தார் நான் ஆடிப்பாடுவேன்
எவரும் அறியாரே என் உள்ளம் பொங்குதே
என் உள்ளம் பொங்கிப் பொங்கிப் பொங்கிப்
பொங்கி வழியுதே

4. என்ன என்ன ஆனந்தம் எங்கு மில்லா ஆனந்தம்
இயேசு எந்தன் உள்ளத்தில் வந்த அந்த ஆனந்தம்
சஞ்சலத்தை நீக்கிறார் சந்தோஷத்தை நல்கிறார்
[illegible] ஆரோக்கியம் சாத்தானைத் தாக்கிறார்

5. வேதத்திலே வேதத்திலே விலைமதியா முத்துக்
களுண்டு
தினந்தோறும் நீ அம் முத்துக்களைப்பார்
உண்மையாகவே நீ ஒரு முத்தாய் மாறுவாய்

6. 1. பெலன் கொடுப்பவரால் (3)
எல்லா வற்றையுமே செய்வேன்
2. கிருபை தருபவரால் — எல்லா
3. ஞானம் தருபவரால் — எல்லா
4. சுகம் தருபவரால் — எல்லா
5. மன்னிப்புத் தருபவரால் — எல்லா
6. அன்பைத் தருபவரால் — எல்லா
7. நீதியைத் தருபவரால் — எல்லா
8. இரட்சிப்புத் தருபவரால் — எல்லா
9. ஜெயம் கொடுப்பவரால் — எல்லா
10. எல்லாம் கொடுப்பவரால் — எல்லா

7. 1. இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்
(3)
பின்னேக்கேன் நான், பின்னேக்கேன் நான்
(2)
2. உலகம் என் பின்னே, சிலுவை என் முன்னே
3. கஷ்டம் என் இன்பம், நஷ்டம் என் லாபம்
4. இயேசு என் ஆசை, சீயோன் வாஞ்சை

8. 1. அவர் அற்புத மானவரே (2)
என்னை மீட்டெனைக் காத்தென்னைத் தாங்கு
2. அவர் உன்னதர் என்றனரே (2) [கிறார்
விண் சூரிய சந்திர நட்சத்திரங்கள்
3. அவர் அற்புத மானவரே (2)
அவர் சிங்கத்தின் வாயைக் கட்டினரே

4. அவர் உன்னதர் என்றனரே (2)
அவர் காற்றையும் கடலையும் அதட்டினரே

5. அவர் அற்புத வைத்தியனாம் (2)
என் நோயையும் சாவையும் ஜெயித்தனரே

9. 1. எழுப்புதல் அனுப்பும் எழுப்புதல் அனுப்பும்
எங்கள் உள்ளத்திலே — அல்லேலூயா
எழுப்புதல் அனுப்பும் எழுப்புதல் அனுப்பும்
சீக்கிரத்திலே

2. வியாதியை நீக்கும் பிசாசைத் துரத்தும்
இயேசுவின் நாமத்திலே — அல்லேலூயா
பாவத்தை மன்னியும் ஆவியைத் தாரும்
இரட்சகரின் நாமத்திலே — எழுப்புதல்

10. நாங்கள் பூமியில் அரசாளுவோம்
இரத்தத்தால் மீட்டார் — அல்லேலூயா
ஆசாரியனு மாக்கினார் — அல்லேலூயா

11. இயேசுவை சேவிக்கத் தீர்மானித்தேன்
சேவிப்பேன் இயேசுவையே
இந்த லோக இன்பம் யாவும் பின்னே விட்டு
சேவிப்பேன் இயேசுவையே
அவர் செல்லும் இடமெல்லாம் செல்வேன்
அவர் இன்முகத்தால் பாவம் வெல்வேன்
— ஓ இயேசுவை

12. என் அன்பராம் இன்பமாம் இயேசு
என் ஆறுதல் தேறுதல் இயேசு
என் நேசராம் மீட்பராம் இயேசு
என் ரட்சிப்பும் மோட்சமும் இயேசு

அவர் பள்ளத் தாக்கில் லீலி
லீலி புஷ்பம் அவரே
அவர் சாரோனின் ரோஜா
ரோஜா புஷ்பம் அவரே

13. இன்ப இயேசு என் மதுரம்
என் அற்புதம் நீரே
விடி வெள்ளிக்கு மேல் பிரகாசிக்கின்றீர்
உந்தன் ரூபம் வழி லீலியிலும் அழகுள்ளதே
என் அருமையின் மதுரம் நீரே

14. நேற்றும் இன்றும் என்றும் மாருர் இயேசு ரட்சகர்
எல்லாம் மாறினும் இயேசு மாருர் மகிமை அவர்க்கே
மகிமை அவர்க்கே மகிமை அவர்க்கே
எல்லாம் மாறினும் இயேசு மாருர் மகிமை
அவர்க்கே

15. அற்புதம் அற்புதம் இயேசு எனக்கு
யோசனைக் கர்த்தராம் வல்ல மீட்பராம்
பாவம் சாபம் யாவும் நீங்கி என்னை ரட்சித்தார்
அற்புதம் என் இயேசுவுக்கு ஸ்தோத்திரம்

16. நேசர் தேடி வந்தார்
இரத்தம் சிந்தி மீட்டார்
என்னைச் சொந்த மாக்கிக் கொண்டனர்
ஜெயகீதம் பாடச் செய்தனர்

17. இயேசு தங்கப் பேனுவை அன்றே தொட்டாரே
தொட்டாரே தொட்டாரே
யேசு தங்கப் பேனுவை அன்றே தொட்டாரே
என் பேரங்கெழுத — எழுத என் பேரங்கெழுத
எழுத என் பேரங்கெழுத — இயேசு தங்க

18. 1. இரத்தத்தால் ஜெயம் (3)
இயேசுவே!
அல்லேலூயா! அல்லேலூயா
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே!

2. இயேசு ஜெயித்தார்

3. நாமும் ஜெயிப்போம்

4. சாத்தான் தோல்வியுற்றான்

19. வல்லமை உண்டே உண்டே அற்புத வல்லமை
இயேசுவின் இரத்தத்தில்
வல்லமை உண்டே உண்டே அற்புத வல்லமை
இயேசுவின் திரு இரத்தத்தினால்

20. நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே
என் பாவப் பாரமெல்லாம் நீங்கிற்றே
சர்வ பாவங்களும் சுத்தி செய்யும் இரத்தத்தால்
அல்லேலூயா நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே
என் பாவப் பாரம் எல்லாம் நீங்கிற்றே.

21. நான் ஆடிப்பாடி மகிழ்வேன் (3)
என் பாவம் நீங்கிற்றே
என் இயேசு ரத்தமே
விடுதலை யதே
என் பாவம் புரண்டோட
என் பாவம் உருண்டோட
அது புரண்டு உருண்டு ஓட
அது மறைந்து போனதே

22. பாவி நம்மை மீட்க வந்த
பாவங்களைப் போக்க வந்த
கிறிஸ்துவுக்காய் எழுந்திடுவோம்

இம்மையிலே ஏசுவுக்காய்
உண்மையோடு ஜீவித்திட
கல் வாரியைப் பற்றிக் கொள்வோம்

1. கிறிஸ்துவோடு பர்வதங்கள் ஏறிடுவோம்
பாவலோக மோகம் யாவும் வெறுத்திடுவோம்
வேதத்திலே உறுதியாய் நிலைத்திருப்போம்
ஜெபத்திலே நிலையாகத் தரித்திடுவோம்

23. கர்த்தர் எந்தன் மேய்ப்பர்
நான் என்றும் பாடுவேன்
அமர்ந்த தண்ணீரண்டை
நான் என்றும் நடப்பேன்
என்றும் என்றும்
நான் என்றும் பாடுவேன்
என்றும் என்றும்
நான் என்றும் நடப்பேன்

24. மின்னி மின்னித் துலங்கிடும்
ஜொலித்திடும் பொன்னுலான நகரம்
அற்புதக் கின்னர வீணைகளால் (2)
என்றும் இன்பக் கீதங்கள் முழங்குவோம்
இயேசுவோடு நான்
என்றென்றும் வாழுவேன் } (2)

25. துதி கனம் மகிமையுமக்கே
ஓ எல்லாமுமே ஓ எல்லாமும்
துதி கனம் மகிமையுமக்கே
ஓ நீரே ராஜாவே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் மிக ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஓ நீரே ராஜாவே — துதி

ENGLISH CHORUSES

1. Let the beauty of Jesus be seen in me
All His wondrous, compassion and purity
Oh, thou Spirit divine all my-nature refine
Till the beauty of Jesus be seen in me

---

2. Turn your eyes upon Jesus
Look full in His wonderful face
And the things of earth will grow strangely-
In the light of His glory and grace [dim

---

3. Walking with Jesus
Walking every day walking all the way
Walking with Jesus
Walking with Jesus alone
Walking in the sun shine
Walking in the shadow
Walking every day, walking all the way
Walking in the sun shine
Walking in the shadow
Walking with Jesus alone.

---

4. Teenager are you lonely
Do you need a friend !
Take Jesus as your Saviour
He will keep you to the end
He'll be your guide, stay by your side
Teenager, take Jesus to-day.

---

5. I have decided to follow Jesus (3)
No turning back, no turning back
The world behind me, the cross before me (3)
No turning back, no turning back.

6. Is anything too hard for the Lord
Is anything too hard for the Lord ?
Is anything too hard ?
Is anything too hard ?
Is anything too hard for the Lord ?
No, nothing is too hard for the Lord
No, nothing is too hard for the Lord
No nothing is too hard
No nothing is too hard
No nothing is too hard for the Lord.

7. Trust in the Lord and don't despair
He is a friend so true
No matter what your troubles are
Jesus will see you through
Sing while the day is bright
Sing through the darkest night
Everyday ; all the way
Let us sing, sing, sing.

8. Everybody ought to know (3)
Who Jesus is
He's the lily of the valley
He's the bright and morning star
He's the fairest of ten thousand
Everybody ought to know.

9. Whosoever will to the Lord may come (3)
He will not turn away
Jesus, Jesus heals the broken hearted (3)
He will set you free.

---

10. Life is wonderful
Oh so wonderful
Life is wonderful now to me
I took Jesus in
He changed everything
Life is wonderful now
Since his blessings came
Into my heart
Joy unspeakable fills my every part
Now I want to live for my Lord
Life is wonderful now.

---

11. I love Him better everyday
Close by His side
I will abide
I love Him better everyday

---

12. Move on brother, move on sister
This is the moving day
Move a little closer
Take your stand with Jesus
Move on brother move on
The move is on my Lord the move is on
The move is on my Lord the move is on
I hear the rustle in the mulberry trees
I know, I know, I know the move is on.

---

13. Do Lord O do Lord O do remember me (3)
Look away beyond the blue
I've got a home in glory land that
out shines the sun (3)
Look away—beyond the blue—Do Lord
I took Jesus as my Saviour you take Him
too (3)
Look away beyond the blue—Do Lord
The Lord is my shepherd, I shall not
want (3)
Look away beyond the blue—Do Lord
If you can't bear the cross then you
Can't wear the crown (3)
Look away beyond the blue — Do Lord

---

14. It's bubbling, it's bubbling
It's bubbling in my soul
I'm singing I'm dancing
Since Jesus made me whole
Folks can't understand it
How can I keep it quiet
It's bubbling bubbling bubbling
bubbling bubbling day and night.

---

15. Stop and let me tell you
What the good Lord is done for me
Stop and let me tell you
How the good Lord's set me free
For He has healed my body

Saved my soul, baptised me and made
me whole
Stop! and let me tell you
What the good Lord has done for me.

---

16. He's able, He's able
I know my Lord is able
I know my Lord is able to carry me thro'
He heals the broken hearted
And sets the captive free
He makes the lame to walk again
And cause the blind to see
For He is able He's able
I know my Lord is able
I know my Lord is able to carry me thro'.

---

17. When the Saints go marching by—2
Lord I want to be among the number
When the saints go marching by.

---

18. He is my every thing, He is my all.
He is my everything, both great and small
He makes my life complete, makes
everything new
He is my everything, for evermore.

---

19. Every promise in the Bible is mine
Every chapter every verse every line
All blessings of His Love Divine
Every promise the Bible is mine.

---

20. Heaven came down and glory filled my soul
When at the cross my Saviour made me whole
My sins are washed away, and my night is turned today
Heaven came down and glory filled my soul.
Oh, what a wonderful, wonderful day,
Day I will never forget
After I wandered in darkness away
Jesus my Saviour I met
Oh, what a tender, compassionate friend,
He met the need of my soul.
Shadows dispelling with joy I am telling
He made all my darkness depart.

---

21. Every day with Jesus
Is sweeter than the day before,
Every day with Jesus
I love Him more and more
Jesus saves and keeps me.
And He's the one I am waiting for.
Every day with Jesus.
Is sweeter than the day before.

---

22. I want everybody to be happy
I want everybody to be glad
I want everybody to be happy in the Lord
And I don't want any body sad

---

23. Give me oil in my lamp, keep me burning
Give me oil in my lamp, I pray
Give me oil in my lamp, keep me burning
Keep me burning till the break of day

Sing Hosannah ! Sing Hosannah !!
Sing Hosannah to the King of Kings
Sing Hosannah ! Sing Hosannah !!
Sing Hosannah to the King of Kings.

---

24. 1. Whisper a prayer in the morning
Whisper a prayer at no...on.
Whisper a prayer in the evening
To keep your heart in tune.

2. Worship the Lord in the morning
Worship the Lord at no ...on,
Worship the Lord in the evening
To keep your heart in tune.

3. God answers prayer in the morning
God answers prayer at no...on.
God answers prayer in the evening
So keep your heart in tune.

4. Prayer changes things in the morning
Prayer changes things at no ...on,
Prayer changes things in the evening
So keep your heart in tune.

5. Jesus may come in the morning
Jesus may come at no ..on,
Jesus may come in the evening
So keep your heart in tune.

---

25. 1. I have the joy joy joy joy down in
[my heart
Down in my heart, Glory to His Name

2. I have the peace that passeth
[understanding

3. I have the love of Jesus love of Jesus

4. I have the faith that crosses, mountains,
[valleys

5. I have the Christ Christ Christ Christ.